692

தொழில்

INDUSTRY FORTNIGHTLY

மாதம் இருமுறை

ஆசிரியர் :
கே. பெருமாள் உடையார்

விலை 25 நயாபைசா
15-8-58

விடுதலைத் திருநாள் மலர்

OFFICE OF THE REGISTRAR OF ...
19 AUG 1958
MADRAS

692/5-58



M. KANNAN

Government Approved Fabricator and Contractor

(Regd. 10)

No. 30, Wall Tax Road, Madras-3.



★

Please Contact us for
Collapsible Gates,
Main Gates,
Window Grills,
Ventilators and all other
Building materials

★

Steel Trusses and erection works undertaken.



COLLAPSIBLE GATE

Specialist in Arc and Gas welding.

Stainless Steel, Aluminium Gas cutting works are also undertaken.



MAIN GATE

Our motto is to satisfy our customers.

தொழில்

இந்த இதழில்

		பக்கம்
தலையங்கம் :		
விடுதலைத் திருநாள்	...	3
அஞ்சலி!	...	3
கவிதைகள் :		
இன்றே நமது ஆணை!	...	4
செல்லப்பா நீ சொல்லப்பா !	...	24
பரதவரைப் பாரீர் !	...	31
கட்டுரைகள் :		
பென்சில் தொழில்	...	17
மெட்ரிக் முறை அளவுகள்	...	33
தொழிலாளரும், துயரமும்	...	37
சிந்தனைக் கருவூலம்	...	39
கதைகள்:		
ரங்கப்பாவின் தேச பக்தி	...	10
தியாகியின் உள்ளம்	...	25
தொடர்கதை : இணைந்த உள்ளங்கள்	...	51

Are you interested in purchasing Iron, Steel and Tin products such as Buckets, Fire Buckets, Sals, Pots, Drums, Suit-cases, Bath-Tubs, Watering Cans, any kind of tin containers, etc. etc?



Then we offer our service to you

We are confident that our long experience in the manufacture of these and other allied products and supply against the orders of the Southern Railway and the Ministry of works. Housing & Supply will stand us in good stead to fulfil your valuable orders quickly.

Please Address your Enquiries to:

P. K. GOVINDASWAMY

(Estd. 1944)

Govt. Approved Iron & Steel Fabricator

46, Wall Tax Road, Madras-3.

The House for EFFICIENCY, SATISFACTION & PROMPTITUDE

Grams: "IRONFABRIC" MADRAS

அண்ணலுக்கு அஞ்சலி!



வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!

—பாரதி

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே !"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 15—8—58	இதழ் 8

விடுதலைத் திருநாள்

நாடு விடுதலையடைந்து பதினோரு ஆண்டுகள் நிறைவெய்துவதை இன்று நாம் கொண்டாடுகிறோம். நேற்றுத்தான் சுதந்திரம் வந்தாற்போல இருக்கிறது; ஆனால் 11 ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன!

விடுதலைத் திருநாளான இன்று நாம் சுதந்திர இந்தியாவுக்கும், அன்றிருந்த அடிமை இந்தியாவுக்குமிடையே யுள்ள வேற்றுமைகளை நினைத்துப்பார்க்க வேண்டும். பிறப்பு காரணமாக ஆளும் உரிமை பாராட்டிய சுதேச மன்னர்கள் ஆட்சி இன்று இல்லை. குடியாட்சியில் கோனாட்சிக்கு ஏது இடம்? மன்னர்களுக்கு அல்லது வெள்ளை அதிகாரவர்க்கத்துக்கு ஊழியம் புரிந்ததால் நிலமான்யம் பெற்று ஜாகீர்தார்களாகவும், ஜமீன்தார்களாகவும் மக்களைச் சுரண்டிவந்த கூட்டமும் இன்று இல்லை. பிறப்பால் இழிந்தவன் என்ற இழிநிலையை நந்தன் காலத்திலிருந்து தமிழ் நாடு கண்டித்து வந்துள்ள போதிலும், நாடு விடுதலையடைந்த பின்புதான் ஹரிஜனங்களுக்கு ஆலயங்கள் அனைத்தும் திறந்து விடப்பட்டன; அவர்கள் கோவிலுக்குள் நுழைந்து அனைவருடனும் சமமாக நின்று வழிபடத் தொடங்கியதால் ஆண்டவன் எங்கும் ஓடி விடவில்லை. உணவு விடுதி, கேளிக்கை நிலையங்கள், கிணறுகள் போன்ற பொது இடங்களில் பிறப்பினால் வேற்றுமை பாராட்டுவது அறவே ஒழிந்து விட்டது; காரணம் இன்று அது சட்டப்படி தண்டிக்கத் தக்க குற்றம்!

மக்கள் உயர்வதற்காக குடி ஒழிக்கப்பட்டது; இது மாபெரும் சாதனை. பட்டித் தொட்டிகளில் எல்லாம் -சிற்றில்களிலும், அடுக்குப்பானைகளிலும் இன்று பணம் புழங்குகிறதென்றால் மதுவரக்கன் மாய்ந்தது தான் காரணம்.

போர்க் கொடுமைகள் பலவும் தொலைந்து ஒழிந்தன. குறிப்பாக உண்பதற்கும், உடுப்பதற்கும் இருந்த கட்டுப்பாடுகள் விடுதலை இந்தியாவில் ஒழிக்கப்பட்டு விட்டன. "ஆறு அவுன்ஸ்" "நாலுகெஜம்" என்ற அவச் சொல்கள் மாய்ந்தொழிந்தன. போரினால் ஏற்றுமதிகள் இல்லாமல் போனதால் நூல் தட்டுப்பாட்டினால் கடும் அல்லல்களுக்குள்ளான கைத்தறிகள் இன்று ஒலி முழக்கிய வண்ணம் உற்பத்தி செய்கின்றன. மாதத்துக்கு நாலு நாள்தான் வேலை என்ற நிலை மாறி மாதம் முழுவதும் இன்று நெசவாளர்கள் வேலை செய்கின்றனர். கைத்தறி நெசவாளர்களுக்கு அரசாங்கம் வழங்கும் உதவிகள் பலப்பல. நெசவாளர் வாழ பல குடியிருப்புகள் கூடக்கட்டிக் கொடுக்கப்

அஞ்சலி !

அண்ணல் காந்தியடிகளுக்கும், அன்னை கஸ்தூரிபாய்க்கும் "தொழில்" முடிதாழ்த்துகிறது! விடுதலைக்காக உயிர் நீத்த வீரர்களை அண்ணல் வடிவிலும், வீராங்கனைகளை அன்னையின் வடிவிலும் மக்கள் காண்கின்றனர் ; எனவே அவர்கள் திருவுருவப்படம் "தொழில்" முகப்பை அலங்கரிக்கிறது..ஈடில்லாத் தியாகங்கள் புரிந்தும், இன்னுயிர் ஈய்ந்தும், நமது நாட்டுக்கு விடுதலை பெற்றுத்தந்த அத்தனை மாவீரர்களுக்கும் அஞ்சலி செலுத்துகிறது "தொழில்".

இன்றே நமது ஆணை!

—இனியன்—

1. வீரத் திலகங்கள் வீறுடனே செய்திட்ட
தீரச் செயல்கேளீர் செப்பிடுவேன்—பாரதத்தின்
ஈன நிலைகண்டு ஈந்திட்டார் ஆவிதனை
காண உடல் சிலிர்க்கும் தான்

2. திலகர் லஜபதிராய் தென்பாண்டிக் கட்டபொம்மன்
தென்னகத்து தீரர் சிதம்பரனார்—என்னாளும்
புன்னகைசேர் முகத்தார் புண்ணியராம் காந்திஜி
இன்னோர் சிறை சென்றார் கேள்

3. அண்ணலையும் வாட்டி அடைத்தார் கொடுஞ்சிறையில்
கண்ணிமையாம் மோகனதாஸ் காந்திசொன்னார்—"கண்டிடுவேன்
இன்றே சுதந்திரத்தை" என்றார்; உறுதிகொண்டார்
பூண்டாரே போர்க்கோலம் தான்

4. இந்நாட்டின் மானமதை ஈட்டச்சுதேசிக் கப்பல்
தென்னாட்டில் விட்டவொரு சிங்கமதாம்—வன்சிறைக்குச்
சென்றிட்டார் செக்கிழுத்தார் தின் கரும்பை மென்றாலும்
குன்றும் சுவையென்றும் கூறு

5. முன்னையோர் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைய
பின்னையோர் ஐந்தாண்டுத் திட்டம் பார்—வென்றோம் நாம்
இன்றே நமதாணை எங்கணுந்தான் சென்றிடவே
நன்றே மகிழ்ந்திடுவோம் நாம்.

JL. M24, N58 TO N58.1.8

பட்டுள்ளன! நுண்துகில் நெசவு செய்ததற்காக விரலை வெட்டிய வெள்ளையராட்சியில் சொந்த வீட்டில் வாழக் கனவு காணக்கூட நெசவாளர்கள் அஞ்சியிருப்பார்கள்!

44853

வாய்ப்பிருந்த இடங்களில் எல்லாம் அணைக்கட்டுகள், மின்சார உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. சாலைகள் போடப்பட்டுள்ளன. சோலைகள் தோன்றியுள்ளன. நெய்வேலி நிலக்கரியும், சேலத்து அலுமினியமும் சில நாளில் மக்களுக்குப் பயன்படப்போகின்றன.

குக்கிராமங்களில் எல்லாம் இருளகற்றும் மின்சாரமும், அறிவூட்டும் பள்ளிகளும், பிணியகற்றும் மருத்துவ நிலையங்களும் பெருகியுள்ளன. வறுமை மாய்ந்து வளமை ஓங்கத் துவங்கியுள்ளது.

மொழிவழியாக நாடு பிரிக்கப்பட்டது. இழந்த குமரியைப் பெற்றோம்! திருத்தணியை மீட்டோம். தமிழ் ஆட்சி மொழியாக அரசுக்கட்டிலில் ஏறி அமர்ந்து செங்கோலோச்சுகிறது. தமிழர்கள் தலை நிமிர்ந்து நிற்கின்றனர். நாட்டில் நிலையான நல்லாட்சி நடக்கிறது. ஆம்! நமது விடுதலைக் கனவுகளில் பெரும்பாலானவை நனவாகி விட்டன; எஞ்சியவை நனவாகி வருகின்றன.

பதினோரு ஆண்டுகளுக்குள் சாதனைகள் பலப்பல. இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

இனி நிறைவேற்ற வேண்டிய நற்பணிகளுக்கு இன்று நம்மைப் பணித்துக் கொள்வோமாக. பெற்ற விடுதலையைப் பேணிக் காக்க உறுதி கொள்வோமாக!!

ஆட்சித் தலைவர்கள்



ராஷ்டிரபதி
டாக்டர் ராஜேந்திரபிரசாத்



பிரதமர் நேருஜி

உபராஷ்ட்டிரபதி
டாக்டர் ராதாகிருஷ்ணன்

கட்சித் தலைவர்கள்

ஸ்ரீ தேபர்
இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்

ஸ்ரீ ராஜாராம் நாயுடு
தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்

சென்னை மாநில



ஸ்ரீ கே. காமராஜ்
முதல் அமைச்சர்



ஸ்ரீஎம். பக்தவத்சலம்
உள்நாட்டிலாகா மந்திரி

★



ஸ்ரீ ஸி. சுப்ரமணியம்
நிதி மந்திரி



ஸ்ரீ மாணிக்கவேலர்
ரெவினியூ மந்திரி

அமைச்சர் குழு



ஸ்ரீ P. கக்கன்
மராமத்து இலாகா மந்திரி



ஸ்ரீ V. ராமையா
மின்சார இலாகா மந்திரி

★

ஸ்ரீமதி லூர்தம்மாள் சைமன்
ஸ்தல ஸ்தாபன மந்திரி

ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன்
தொழில் மந்திரி

பூதான தந்தை விநோபாஜீ

அண்ணல் காந்தியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி உயர்ந்தத் தொண்டினைப் புரிந்து வரும் பூஜ்யர் விநோபா பாவேயின் உயர் தத்துவத்தை அயல் நாட்டினரும் அறிந்து பாராட்டுகின்றனர். பூதான இயக்கத் தந்தைககு நவ நாகரிகம் கொழிக்கும் நாட்டினர் பதினாயிரக் கணக்கில் டாலரை வாரி வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது குறித்து நாம் மகிழ்ச்சிப் பெரு வெள்ளத்திலாழ்கிறோம்! ஆம்; அண்ணல் காந்திக்குப் பின் நாம் காணும் பேரொளி விநோபாஜீயேயன்றோ!

இவ்விடுதலை நந்நாளில் அன்னாருக்கு நமது அஞ்சலி!

வீரர் சிதம்பரனாருக்கு அஞ்சலி

உறங்கிக் கிடந்த தமிழகத்தை வீறுகொண் டெழச் செய்த தென்னகத்துத் தேசியத்தந்தை வீரர் சிதம்பரனாருக்கு இவ்விடுதலை நன்னாளில் நமது அஞ்சலியைச் செலுத்துவோம். வழக்கறிஞர் தொழிலை உதறி, வாழ்நாளை தேச விடுதலைக்குஅர்ப்பணித்து, வெள்ளையர்க் கெதிராய் கப்பல் ஓட்டி, சிறையில் செக்கிழுத்து, தொழிலாளர் நலனுக்காக உழைத்து தியாகத்தின் உறைவிடமாய், தேசியத்தின் புகலிடமாய், சரித்திரமென்ற பொன்னேட்டிலே சாசுவதமாய் இடம்பெற்றுள்ள அன்னாரின் அருந்தொண்டின் பயனே, இந்நாளில் நாம் கொண்டாடும் விடுதலை நாள் விழா.

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய் நன்றி கொன்ற மகற்கு'' என்ற வள்ளுவர் வாக்கை உள்ளத்திருத்தி பாடுபட்ட பெருமகனாம் சிதம்பரனாரைப் பணிந்து நன்றியைச் செலுத்துதல் நம் கடமையே யன்றோ!

அழகிய அச்சு வேலைகளுக்கு

புதிதாக தயாரிக்கப்பட்ட தமிழ் எழுத்துக்கள்!

லலிதா ரோமன்

(Patent Regd. No. 94604-D)

14 pt. 60 lbs.

உலகம் பல தொழிலில் சுழன்றா
லும் ஏர்த்தொழிலின் பின் நிற்

12 pt. 60 lbs.

கின்றது; உழவு செய்ய முடியாமல்
மற்றத் தொழிலைச் செய்கின்றவர் எல்
லாரையும் தாங்குவதால் உழவு செய்

11 pt. 60 lbs.

கின்றவர் உலகத்தார்க்கு அச்சு ஆணி
போன்றவர். உழவுத் தொழில் செய்து
அதனால் கிடைத்ததை உண்டு வாழ்கின்

10 pt. 60 lbs.

றவரே உரிமையோடு வாழ்கின்றவர்; மற்றவர்
எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின்
செல்கின்றவரே. நெல்வளம் உடைய தண்

8 pt. 60 lbs.

ணளி பொருந்திய உழவர்கள், பல அரசரின்
குடைநிழல்களையும் தம் குடையின்கீழ்க் காண
வல்லவர் ஆவர். கையால் தொழில் செய்து

6 pt. 30 lbs.

உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர்
பிறரிடம் சென்று இரக்கமாட்டார்; தம்மிடம் இரந்தவர்க்கு
ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார். உழவருடைய கைத்

கிடைக்குமிடம் :—

தி மதறாஸ் டைப் பவுண்டரி, 38, ஜோன்ஸ் தெரு
மதறாஸ்-1

What a pleasure
to write with
good PENCILS!

MPF ✕ COPYING "MERCURY" ✕ 1401 HARD

MERCURY PENCILS
are proved to be
good by all tests

✕ MERCURY ✕ CHECKING · COLOURED ★ MPF RED & BLUE

available in BLACK LEAD, COLOURS
and COPYING

Manufactured by
THE MADRAS PENCIL FACTORY

MERCURY
The name for good Pencils

✕ MERCURY ✕ SPECIAL HB ★ MPF No.1190

3, STRINGER STREET, MADRAS.1.

-ARUNA-

ரங்கப்பாவின் தேச பக்தி

[திரு. கே. ஜி. ராஜா]

"அன்பர்களே! நம் முன்னோர்கள் கட்டை வண்டியிலும், பெட்டி வண்டியிலும் பிரயாணம் செய்தார்கள். கப்பல் பிரயாணத்துக்குக் கூட சரியான வசதியில்லை. பாய்க்கட்டிக் கப்பலில் பிரயாணம் செய்தார்கள். ஆறு நாள் கப்பல் பிரயாணத்தில் நாம் இப்போது மலாயா நாட்டை அடைந்துவிட முடிகிறது. அந்தக்காலத்தில் மாதக்கணக்காகுமாம். அதுவும் கப்பல் தற்செயலாய்ப் போய்ச்சேர்ந்தால்தான் உண்டாம். புயலில், பெரு மழையிலெல்லாம் சிக்கி அல்லல்பட்டுப் போய்ச்சேருமாம். இப்போது பாருங்கள்! விமானயாத்திரை, ரயில் பிரயாணம், பஸ் சவாரி, தந்தி, கம்பியில்லாத்தந்தி, ரேடியோ டெலிவிஷன், விஷகுண்டுகள் இம்மாதிரி விச்சித்திர கண்டு பிடிப்புகளின் மூலம் நம்மையெல்லாம் நாகரிகக்காரர்களாக்கி வாழவைத்துள்ள ஆங்கிலேயர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோமேயன்றி, அவர்களுக்கு துரோகமிழைக்கக் கூடாது" என்று பேசி முடித்தான் ரங்கப்பா.

அவன் உட்கார்ந்ததும் தாமோதரன் எழுந்துப் பேசினான்:

"சகோதரர்களே! நாகரிகமென்பதும், முன்னேற்றமென்பதும், ஒருசாராருக்கோ, ஒருநாட்டாருக்கோ சொந்தமானதல்ல! காலம் மாறுந்தன்மையுடையது. இன்று புதுமையாய்த் தென்படுவது நாளைக்கு பழமையானதாய் மாறிவிடுகிறது. வெள்ளைக்காரர்கள் நம்மை அடிமைப்படுத்திக் கொண்டிருப்பதால்தான் நாகரிகத்தையடையவும், நவீன சாதனங்களை அனுபவிக்கவும் முடிகிறதென்றெண்ணுவது தவறு. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குட்படாத மற்ற நாடுகளெல்லாம் நாகரிகமென்று எவற்றை நாம் நினைக்கிறோமே, அவற்றை அனுபவிக்காமலிருக்கிறார்களா? நவீன கண்டுபிடிப்புகளை அவர்கள் தெரிந்துகொள்ளாமல் காட்டுமிராண்டித்தனமாய் வாழ்கிறார்களா? காலம் மாறமாற எல்லாமே மாறிக்கொண்டுதான் போகும். எந்த நவீனக் கண்டுபிடிப்பும் எல்லா நாடுகளிலும் பரவத்தான் செய்யும். அறிவு விசாலமானது; அளவிற்குற்பட்டதல்ல. அறிவாளிகள் எந்த நாட்டிலும் பிறப்பார்கள். எந்தச்சாராரிலும் பிறப்பார்கள். ஆங்கிலேயர்கள் ரயில் வழி ஏற்படுத்தினார்கள். விமான யாத்திரைக்கு வழிப்பண்ணினார்கள்; ரேடியோ, வயர்லெஸ் வசதிகளைப் பண்ணினார்கள் என்பன போன்ற காரணங்களை முன்னிட்டு அடிமை வாழ்வை விரும்புவது அர்த்த மற்றது மாத்திரமல்ல, அபாயமானதுங்கூட. சொந்த நாட்டில் சுதந்திரமாய் வாழ உரிமையில்லாமலிருப்பது மனிதத்தன்மைக்கே மதிப்பில்லாததாகும். சுதந்திரத்தின் அவசியத்தை அறிந்துதானே திலகர் "சுதந்திரம் என்துபிறப்புரிமை; அதை நான் அடைந்தே தீருவேன்!" என்று வீரசபதம் பூண்டார். நம் நாட்டில் வீர சிதம்பரனார் போராடி சிறைப் புகுந்து செக்கிழுப்பது போன்ற தொல்லைகளுக்காளானது எதனால்? திருப்பூர் குமரன் கையிலேந்திய கொடியைவிடாமல்போலீஸ் குண்டாந்தடியால் உயிர் நீத்தது எதனால்? காந்தியடிகள் அகிம்சா முறையில் ஆங்கிலேயரை எதிர்த்துப்போராடிவதேன்? நாட்டின் விடுதலை தம் உயிரினும் சிறந்ததென்றெண்ணியதால்தானே! எனவே, நம்நாடு மற்ற நாடுகளைப் போல் சுதந்திர நாடாய் விளங்கப்பாடு படுவதே நம் கடமை".

கைத்தட்டலுக்கிடையே தாமோதரன் உட்கார்ந்தான். அதுவரை பொறுமையோடு உட்கார்ந்திருந்த ரங்கப்பா மேலும் அங்கிருக்க மனங்கொள்ளாதவனாய் விருக்கென்று எழுந்து சென்றான்.

அதன்பின் தேச சுதந்திரம் தேவையென்று சில மாணவர்களும், தேவையில்லையென்று சில மாணவர்களும் பேசினார்கள்.

அன்று நடந்த மாணவர் சங்கக் கூட்டம் தலைமை

ஆசிரியரின் முடிவுரையோடு முடிவுப் பெற்றது. தலைமை ஆசிரியர் அன்று பேசிய மாணவர்களின் பேச்சுத் திறமையை வியந்து பேசினாரேயன்றி கொள்கைகளை ஆதரித்தோ மறுத்தோ பேசவில்லை. கூட்டம் முடிவுற்ற பின்னர் மாணவர்களும் மற்றவர்களும் தத்தம் வீடுநோக்கிச் சென்றனர்.

மறுநாள்: இந்திய தேச சரித்திரத்தை மாற்றியமைத்த நாள் அது. அரை நூற்றாண்டுக்கு அதிகமாகப் போராடிய சுதந்திர வீரர்களின் மாறாத ஆசைக்கு முடிவு கட்டி விடும் நோக்கத்தோடு செங்கதிரோன் கீழ்வானத்தில் உதயமானான். உடல், பொருள், ஆவி மூன்றையும் தேச விடுதலையின் நிமித்தம் அர்ப்பணித்த ஆயிரக்கணக்கான வீரத்தியாகிகளின் உழைப்புக்குப் பயன் தரும் நாளாய் அது அமையுமென்று யாரும் எண்ணிக் கூடப் பார்த்திருக்க மாட்டார்கள்.

"வெள்ளையனே வெளியேறு" என்று தீர்மானித்ததின் பயனாய் காந்தியடிகளும் மற்றத் தலைவர்களும் முதல் நாளிரவு கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்தியைக் கேட்ட மக்கள் கொதித்தெழுந்தார்கள்.

வியாபாரிகள் கடையடைப்புச் செய்தார்கள். தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. பள்ளிகளெல்லாம் மூடப்பட்டன. வண்டி வாகனங்களின் ஓட்டமும் ஸ்தம்பித்துப் போயிருந்தது. ஏதோ இனந்தெரியாத ஓர் வகை வெறுப்புணர்ச்சி எல்லோரிதயங்களிலும் குடி புகுந்திருந்தது.

மக்களின் மனநிலையையறிந்த அதிகார வர்க்கம் முன்னெச்சரிக்கையாய் தடையுத்தரவைப் பிறப்பித்திருந்தது. ஊர்வலமோ, பொதுக் கூட்டமோ நடத்தக் கூடாதென்பது மாத்திரமல்ல, நான்கு பேர் கூடி நின்று பேசவும் கூடாது. தெருக்களிலெல்லாம் போலீஸ் வாகனங்கள் பவனி வந்து கொண்டிருந்தன. போலீஸ் அதிகாரிகள் மிடுக்கான உடையோடு, காரிலும், மோட்டர் சைக்கிளிலும் சுற்றி வந்தனர். போலீஸ் சேவகனாய் உத்தியோகத்திலமர்ந்தபோது திடகாத்திரனாயிருந்து நாளடைவில் செய்த தீவினையால் நோயாளியாகி கூனிக்குறுகிப் போயிருந்த சோணிப்பயல் கூட அப்போது துப்பாக்கியைக் கையிலேந்தி எமகிங்கரனைப்போல் காணப்பட்டான். அவன் அப்படிக் காணப்பட்டது மாத்திரமல்ல; யார் யார் உயிர்களையெல்லாமோ பறித்துப் போக வந்துள்ள எமகிங்கரனாகவே தன்னை நினைத்துக் கொண்டான் அந்த நோஞ்சான் வீரன்.

திடீரென்று ஓர் வதந்தி நகர் முற்றும் பரவி மக்களை கதி கலங்கச் செய்து விட்டது. தியாகி தாமோதரன் தலைமையில் தடை உத்தரவை மீறி ஓர் ஊர் வலம் புறப்பட விருப்பதைப் பற்றி எங்கும் ஒரே பேச்சாயிருந்தது. போலீசாரின் போர்க்கோலத்தைக் கண்டு வெகுண்டு போயிருந்த நகர மக்கள் தாமோதரன் குழுவினரான தேசத்தொண்டர்களின் முடிவைக்கேட்டு வியப்பும் வேதனையும் அடைந்தனர். சுதந்திரப் போராட்ட சம்பந்தமாய் அடுத்துள்ள நகரங்களில் அதற்குமுன் நடந்த பல அதிர்ச்சிதரும் சம்பவங்களைப்பற்றி கேள்விப்பட்டிருந்தார்கள்; ஆகையால், அவற்றைப் போல் இங்கும் ஏதேனும் நடந்து விடுமோவென்று பீதி கொண்டார்கள்; அது இயற்கைதானே?

ஊரே வெறிச்சிட்டிருந்தது. பிள்ளையில்லா வீட்டில் கிழவன் துள்ளி விளையாடுவான் என்பதுபோல் தடை உத்தரவுக்கும், வேலை நிறுத்தத்திற்கும் பணிந்த ஜனங்கள் வீடடங்கிக் கிடக்கவே, வேலையற்றுக் கிடந்த போலீஸ் புலிகள் வானுக்குள் புகுந்து கொண்டு கைகளில் துப்பாக்கிகளைச் சுமந்தவாறு ஊர் சுற்றினர். அவர்களாகச் சுற்றி வரவில்லை. அவர்களைச் சுமந்தபடியே போலீஸ்வான் சுற்றி வந்தது.

காங்கிரஸ் காரியாலயம் திறக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அங்கும் நான்கு போலீஸார் துப்பாக்கியைச் சுமந்தபடி நின்றிருந்தனர்.

தேசியத் தொண்டர்கள் யாருமே அன்று காணப்படவில்லை. தாமோதரனையும், அவன் தோழர்களையும் முன்கூட்டிக் கைது பண்ணி கொட்டடியில் தள்ளி வைக்கலாம் என்று கூட ஸ்தல அதிகாரிகள் திட்டமிட்டிருந்தனர். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது தெரிந்தால் தானே திட்டத்தை நிறைவேற்றப்பார்க்கலாம்? தேசியத்தொண்டர்கள் கண்காணாமல் மறைந்துவிட்டாலும் அவர்கள் வசிக்கும் வீடுகள் மறைந்து விடவில்லை. போலீஸார் கண்ணெதிரில் ஆடாமல் அசையாமல் கம்பீரமாய்க் காட்சியளித்தன. துப்பாக்கி வீரர்களாய்க் காட்சித் தந்த போலீஸார் அந்த வீடுகளை வைத்தக் கண்வாங்காமல் பார்த்தபடி காவல்

கார்த்தனர். மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் நியமிக்கப்படும் காவல்காரன் கூட அவ்வளவு பொறுப்பாய் தன் வேலையைச் செய்யமாட்டான். அரசாங்க சம்பளத்தில் மினுமினுப்பான உடையோடும், மிடுக்கான நடையோடும், துப்பாக்கியைச் சுமந்தபடி வீராதி வீரர்களைப் போல் காணப்பட்ட போலீஸ்காரர்களின் காவலுக்குட்பட்டிருந்த அந்த வீடுகளின் அதிர்ஷ்டத்தை என்னென்று விவரிப்பது?

சட்டத்தை மீறி ஊர்வலம் எங்கிருந்து புறப்படும்? எப்போது புறப்படும்? எத்தனை பேர் கொண்டதாய் அந்த ஊர்வலமிருக்கும்? என்ற விபரங்கள் புரியாமல் போலீஸார் திகைத்தனர். கடைவீதி, தெருக்கள், சாலைகள் இங்கெல்லாம் நடமாடுவோரை கண்ணுங்கருத்துமாய் போலீஸார் கவனிக்கத் தவறவில்லை.

காலை மணி ஒன்பது ஆகியது. கடைத்தெருவும், தெற்கு வீதியும் சந்திக்கும் முகப்பை நோக்கி எதிர் எதிராக இரண்டு கோஷ்டி பரதேசிகள் வந்து கொண்டிருந்தனர். காவியுடையும், உருத்திராட்சமாலைகளுமணிந்திருந்த அந்தப் பரதேசிகள்.

"சாம்ப சதாசிவ!
சாம்ப சதாசிவ!
சடுதியில் ஒழிந்திட
வெள்ளையர்கள்!
சரணமடைந்திட
செந்தலைகள்!
சாம்ப சதாசிவ!
சாம்ப சதாசிவ!"

என்ற பாட்டைப் பாடிக் கொண்டுவந்தனர். அவர்களைப் போலீஸார் அவ்வளவாய்ப் பொருட்படுத்தவில்லை. ஆண்டிப் பயல்களின் கூட்டம் என்று அலட்சியமாய் நினைத்து விட்டனர்.

ஆண்டிப்பயல்களென்று அலட்சியமாய் நினைத்தப் போலீஸார், அடுத்து அவர்களைக் கண்டு மிரட்சியடைவானேன்? பரதேசிகளைப் போல் உருமாறி வந்துக் கூடிய தேசத்தொண்டர்கள் மறைத்துவைத்திருந்த மூவர்ணக்கொடிகளை உயர்த்திப் பிடித்தனர்.

"வெள்ளையனே, வெளியேறு!
சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை;
அதை அடைந்தே தீருவோம்!"

என்று வானமெட்ட கோஷித்தனர்.

போலீஸ்வான் திரும்பியது. அதிகாரிகள் அவசரமாய் தத்தம் வாகனத்தைத் திருப்பியோட்டி வந்தனர்.

ஊர்வலம் புறப்பட்டது, தாமோதரன் முன்னே நடந்தான். மற்றவர்கள் பின்னே சென்றார்கள். பதினாறு பதினெட்டு வயதடைந்த பள்ளி மாணவர்களே தேசத்தொண்டர்களாய் வந்திருந்தனர்.

அரசாங்கப் பள்ளியில் படிக்கும் மாணவர்களில் இரண்டு வகைக் கொள்கையினரிருந்தனர். ஓர்வகையினரின் கொள்கை; தேசம் விடுதலையடையவேண்டும்.

மற்றொரு வகையினரின் கொள்கை: தேச விடுதலை தேவையில்லை.

விடுதலை வேண்டும் என்கிற கூட்டத்தின் தலைவன் தாமோதரன்.

விடுதலை வேண்டாம் என்று கூறும் கூட்டத்தின் தலைவன் ரங்கப்பா. இவர்களின் வாதப் பிரதிவாதத்தைத்தான் நாம் ஆரம்பத்தில் படித்தது. கொள்கை வித்தியாசம் காரணமாய் ஒருவரோடொருவர் பகையுணர்ச்சியைக் காட்டிவந்தனர். ஒருவரையொருவர் தடைக்கல்லாக மதித்தனர்,

'அரசர் பிறந்தநாள்; ஆங்கிலேயர்கள் போரிலே வெற்றிப்பெற்ற நாள், இப்படியாகப்பட்ட அரச விசுவாச கொண்டாட்டங்களில் ரங்கப்பா கலந்துகொண்டு ஆரவாரம் செய்வான். அதிகாரிகளும் அவன் ராஜ விசுவாசத்தைப் பாராட்டித் தட்டிக் கொடுப்பர்.

தாமோதரன் அடக்கமானவன். ஆடம்பரத்தையோ, ஆரவாரத்தையோகட்டோடு வெறுப்பவன். ஆனால் செயல் வீரன். சொல்வதைச் செய்யவேண்டும் என்பதே அவன் கொள்கை. அவன் தேசத்தை மதித்தான்; தேசத்தலைவர்களை கௌரவித்தான். எதிர்க்கொள்கையினர் அறியாமைக்கு இரங்கினான்.

முகத்திலே மலர்ச்சியும், உள்ளத்திலே கிளர்ச்சியும் ஒருங்கமைந்தவனான தாமோதரன் தலைமையில் ஊர்வலம் நகர்ந்தது.

போலீஸாரின் சைக்கிள் மோட்டாரும், காரும் முன்னோக்கி வந்து கொண்டிருந்தன. அவற்றின்பின்னால் போலீஸ்வான் தொடர்ந்தது.

ஊர்வலத்தின் எதிரே வந்ததும் வாகனங்களிலிருந்து அதிகாரிகள் கீழிறங்கினர். "தொண்டர்களே! நீங்கள் சட்டவிரோதமாய்க் கூடியிருக்கிறீர்கள். உடனே கலைந்து விடுங்கள். இல்லையானால் தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் எல்லாம் நடக்கும்!' என்று எச்சரித்தார் போலீஸ் அதிகாரி.

தாமோதரனோ, மற்ற தொண்டர்களோ பதில் எதுவும் சொல்லவில்லை. அதிகாரியின் எச்சரிக்கையை லட்சியம் செய்தவர்களாய்த் தெரியவில்லை.

"வெள்ளையனே வெளியேறு!
சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை!

அதை அடைந்தே தீரு
வோம்!"

இந்தக் கோஷமே அவர்கள் வாயிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது.

அதற்கிடையில் போலீஸ் வானும் வந்து நின்றது, உள்ளே அடைப்பட்டுக் கிடந்த புலிகள்......இல்லை யில்லை. போலீஸ் சேவகர்கள் ஒருகையில் துப்பாக்கி. மறுகையில் குறுந்தடி சகிதம் 'திபுதிபு' வென்று கீழே குதித்தனர்.

"ஹூம்! தடியடி நடக்கட்டும்!" அதிகாரிப்புலி ஆணையிட, சேவகப்புலிகள் சீறிப்பாய்ந்து சாடினர்.

"ஹா! ஹூ! ஐயோ! அப்பா!" என்ற கூக்குரல்.

போலீஸாரின் மிருகச் செயலால் மண்டையுடைந்தும், கைகால் முறிந்தும் தொண்டர்கள் தரையைத் தழுவி குருதியைச் சிந்தினர்களேயன்றி அஞ்சியோடவில்லை. பாய்ந்தோடிப் பதுங்கவில்லை.

தாமோதரன் மண்டை பிளவுண்டு தரையில் விழுந்து புரண்டான். மற்றவர்களின் கதியும் அதுவாகத்தான் இருந்தது.

இந்தக் குழப்பத்தில், அங்கே பாய்ந்தோடி வந்த ஒருவன் கீழே கிடந்த கொடியொன்றை யெடுத்து உயரத் தூக்கி கோஷமெழுப்பினான்.

"வெள்ளையனே வெளியேறு!
சுதந்திரம் எங்கள் பிறப்
புரிமை,
அதை அடைந்தே
தீருவோம்!"

"ஹூம்! அடிச்சித்தள்ளு!"

போலீஸ் அதிகாரிப் புலி ஆக்ஞையிட்ட மறு நிமிஷம் 'டுமீல்!' என்ற வெடியோசை அங்கிருந்தோர் அனைவரையும் திடுக்கிடச் செய்தது.

'ஹா!' வென்று சுருண்டு விழுந்தான் கொடியைத் தூக்கி கோஷமெழுப்பியவனை ரங்கப்பா!

"ஏண்டா முட்டாள்! உன்னை யாருடா சுடச் சொன்னது?" என்றார் அதிகாரி.

நீங்கத்தானே சுட்டுத்தள்ளச் சொன்னிங்க" என்று நாத்தடுமாற பதிலளித்தான் உசேன் என்ற ஹெட் கான்ஸ்டபிள்.

"அடிச்சித் தள்ளுன்னேன். நீ சுட்டுத் தள்ளிட்டே!...... சரி, அவன் யாரு போய் பார்க்கலாம்......

இரத்த வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்த ரங்கப்பாவின் வாய் அப்போதும்

"வெள்ளையனே வெளியேறு!
சுதந்திரம் எங்கள் பிறப்
புரிமை!
அதை அடைந்தே தீரு
வோம்!"

என்று முனகிக் கொண்டிருந்தது.

"அடடே! இவன் பழைய ராஜவிசுவாசியாச்சே! இப்போ எப்படி தேசபக்தனாய் மாறினான்" என்றார் அதிகாரி.

"நாம் அடிச்ச அடி விசுவாசியையும், வெறுப்பாளியாக்கிடாதா"

என்று எவனோ ஒரு சேவகன் சொன்னது போலீஸ் அதிகாரியின் செவியில் கணீரென்றொலித்தது.

Arumugam Tailoring House

GOVERNMENT CERTIFIED TAILOR &

SUPPLIER OF READY MADE GOODS FROM

BUCKINGAM AND CARNATIC FABRICS

Shortly opening New Show-room

No. 16, Arunachala Naicken Road,

CHINTADRIPET, MADRAS-2

A. ARUMUGAM.

PROPRIETOR.

Telegrams: MARIGOLD MADRAS Phone: 2438.

K. PERUMAL UDAYAR

IMPORTER, EXPORTER & MANUFACTURERS' REPRESENTATIVE

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகள், இறக்குமதி சாமான்கள், தருவித்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

K. PERUMAL UDAYAR

Scrap Merchant and Iron & Steel Fabricator,
34, Wall Tax Road, Madras-3.

நேஷனல் பக்கெட்

டிரேட் மார்க்

CAMEL BRAND

எங்கள் கைத்தொழில்சாலையிலிருந்து விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் தேவையான ஆலை கொப்பரை, நெல் கொப்பரை, மஞ்சள் கொப்பரை, பதனி கொப்பரை, நெல் அளக்கும் மரக்கால், கூடைகள், முறம், சல்லடை, குடம், ஏர் கொளுவு, மண்வெட்டி வகைகளும், தண்ணீர் இறைக்கும் சால், பக்கெட், தொட்டி ரகங்களும் எங்கள் கைத் தொழில் சாலையில் கைதேர்ந்த வேலையாட்களைக் கொண்டு நல்ல முறையில் சுத்தமாக செய்து பொதுஜனங்கள் சௌகர்யத்தை முன்னிட்டு விலை சகாயமாக விற்பனை செய்து வருகிறோம்.

தங்களுக்குத் தேவையான சாமான்களை எங்களிடம் வாங்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

உரிமையாளர் :
P. முஹமது ஹுசேன் ராவுத்தர்,
பேப்ரிக்கேட்டர் Regd. No. 11
13-D, மயிலஞ்சந்தை, திருச்சிராப்பள்ளி-8.

தொடர் கதை:

—புலவர் நா. தேவநாதன்—

முன் கதைச் சுருக்கம்

எஸ். எஸ். எல். ஸி. வரை படித்த செல்வ நம்பி மேலும் படிக்கத்துடிக்கிறான். ஏழைக்குடும்பத்தில் பிறந்தக் காரணத்தால் மேலும் படிக்க முடியாமல் வீட்டைவிட்டு வெளியேறி விடுகிறான். வெளியூரில் ஓர் பணக்காரர் உதவியை நாடுகிறான். அவர் விரட்டவே, வழியிலிருந்த கார் ஒன்றிலிருந்த பணத்தையும், துணியையும் திருடுகிறான். திருடின சொகுசான உடையோடு வேறொரு ஆளோடு ஓட்டல் அறையில் தங்குகிறான். அவனோடு சேர்ந்து திட்டமிட்டு சினிமாவுக்குச் செல்லும் வழியில் குழந்தையின் கழுத்துச் சங்கிலியை அறுக்கிறான், மறுநாள் வைத்திய கல்லூரியில் சேரப்போகிறான். தான்காரிலிருந்துதிருடிய பணமும் உடையும் தலைவருடையவை யென்றறிகிறான். தன் பொருளைத் திருடியவன் என்றறிந்தும் கல்லூரித் தலைவர் அவனை ஆதரிக்கிறார்.

பொன்னியம்மாள் மகனைத் தேடிச் செல்கிறாள். மருதமுத்துவின் வீட்டுக்குப் போய் அங்கிருந்து விரட்டப்படுகிறாள். வேறொரு ஊருக்குப் போய் மகனைத் தேடுகிறாள். அங்கே ஒரு வாலிபன் அவளை அன்போடு வரவேற்று வீட்டுக்கு அழைத்துப் போகிறான்.

மேலும் நடக்கும் சம்பவங்களையறிய கதையில் புகுங்கள்.

5. கவலை நெஞ்சமொடு கல்லூரி அடைதல்

கல்லூரியினின்றும் புறப்பட்ட செல்வ நம்பி தன் சொந்த ஊருக்குள் நுழைந்து விட்டான். வீட்டிற்குள் நுழைந்த செல்வ நம்பியின் முன் கண்ணீர் வடிக்கும் உழவர்களின் காட்சி.! காரணம் தெரியாமலேயே செல்வ நம்பியின் முகம் வெளுத்து விட்டது.

'ஏன் இப்படி வருத்தப்படுகிறீர்கள்? அம்மா எங்கே?' என்று இரண்டு கேள்விகள் கேட்டான், ஒரு பதிலும் வரவில்லை. ஆனால், கன்றும் மாடும் காணாமல் வெள்ளத்தில் செல்ல, கன்றை மட்டும் கண்டவர் போலச் செல்வ நம்பியைக் கண்டதும் அவர்கள் உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி. கிழ உழவரின் மனைவி, 'செல்வம்! சொல்லாமப போகலாமா?' என்று சொல்லிக் கொண்டு அணைத்துக் கொண்டாள். கிழவருக்குவரும் வரையில் ஆர்வம்; வந்த பின் கோபம் வந்து விட்டது. 'சொல்லாமல் போனவன், இங்கு நில்லாமல் செல்லட்டும்' என்று கோபமாக அவனைச் சரியாகப் பார்த்தும் பார்க்காமல் கூறிவிட்டார்.

செல்வநம்பி. கிழவரிடம் வந்தான். 'தாத்தா! கோபித்துக் கொள்ளாதீர்கள். எனக்கு வாழ்க்கை வளர்ச்சியைப் பற்றிய கவலை. வாழ்ந்தால் நன்றாக வாழவேண்டும். இல்லாவிட்டால் சாகவேண்டும். இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் ஒட்டிய

வயிற்றுடன்—ஓரமான பார்வையுடன்— கந்தல் துணிக்காட்சியுடன் வெறும் எலும்புக் கூடாக வாழக்கூடாது. இது என் துணிந்த முடிவு. நான் உங்களிடம் சொல்லாமல் போனதற்காக மன்னிக்கவேண்டும். ஆனால், சொல்லி இருந்தால் என்னை இவ்வளவு தூரம் கையில் காசு இல்லாதநிலையில் அனுப்பியிருக்க மாட்டீர்கள். சூழ்நிலை அறிந்து தான் சொல்லாமல் சும்மா சென்றேன். எவ்வளவு இடையூறுகள்! காசுக்குக் காவலான கள்வர்களைக் கண்டேன். அன்பு வடிவங்களையும் கண்டேன். உணர்ச்சிக்கேற்ற உயர்ச்சியைப் பெற்றுதான் இங்கே திரும்பினேன்'. 'அம்மா எங்கே? சொல்லுங்கள்?......ஏன் மௌனம்? அம்மா எங்கே சொல்லுங்கள்' என்று கேட்டான்'. உழவர் செல்வ நம்பியை அணைத்துக் கொண்டு, செல்வநம்பி! நீ சொல்லுவதெல்லாம் புரியவில்லை. புரியாவிட்டாலும் நீ சொல்லுவதைக் கேட்டால் உன் தாய் எவ்வளவோ ஆனந்த மடைவாள். உன்னைக் காணாமல் உன் தாய் மூன்று நாள் அழுது அலைந்தாள் இன்று எங்களிடமும் சொல்லாமல் எங்கேயோ ......' என்று சொல்லி முடிப்பதற்குள் செல்லநம்பியின் சிந்தை பெருங்காற்றில் அசையும் சிறு கிளையைப்போல அசையலாயிற்று. 'ஆ......'என் அம்மா எங்கோ போய் விட்டார். ஐயோ! எவ்வளவோ ஆசையோடு ஓடி வந்தேனே. எங்கே இருப்பார் என்று தேடுவேன். பேசுவதற்கே சமயமில்லை. எப்படியாவது எங்காவது என் தாயைக் கண்டு பிடித்துக்கொண்டு வந்து விடுகின்றேன். இருங்கள், என்று சொல்லிவிட்டு ஓட்டமாய் ஓடுகிறான்.

அலைகிறான்; அயர்கிறான்; அழுகிறான். எங்கும் கண்டபாடில்லை மீண்டும் ஒருகால் வீட்டிற்கு வந்திருக்கலாம் என்று எண்ணி வீட்டிற்கு விரைந்து வருகிறான். வீட்டிற்கும் வரவில்லை. சோர்ந்த நிலையில் சாய்ந்து விட்டான். பலவாறு யோசிக்கிறான். உழவரும் வருகின்றனர். இப்படி நிகழும் என்று தெரிந்திருந்தால் நான் முன்னதாகவே வந்திருப்பேனே! இத்தனை நாள் இருந்த என் தாய் ஒரு நாள் வரையில் பொறுத்துக் கொண்டிருக்கப் படாதா?

ஆ......இனி அன்புக்குரிய தாயை எங்கே தேடுவேன்! என் உள்ளம் கொதிக்கிறதே. இரத்தம் துள்ளுகிறதே. பணம் படைத்தவர் காணாமல் போய் விட்டால் தேட அக்கறை எடுத்துக் கொள்ளும் படிச் செய்யும். தட்டில் உள்ள ரொட்டியை எடுத்துக் கொடுப்பது போல, இந்த உலகத்தில் அவரைக் கண்டுபிடித்து 'ஏர்மெயில் ஏற்றி அனுப்பி விடுவார்கள். காசு இல்லாதவனைக் கண்ணால் பார்க்க விரும்பாத இந்த உலகத்தில் காணாத என் தாயை எவர் தேடப் போகிறார்? என்று சோர்ந்த நிலையில் சாய்ந்து விட்டான்.

உழவர், அவனை மெல்ல எடுத்துக் தொடை மீது சார்த்திக் கொண்டு, 'செல்வ நம்பி! சிந்தையை அலட்டிக்கொள்ளாதே. சும்மாயிரு' என்றார். செல்வ நம்பி, சிறிது மெல்ல 'தாத்தா' நான் தாய் தந்தை இல்லாத அனாதையாகவா ஆகி விடவேண்டும்! என்னால் இந்த வேதனையைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லையே' என்று கண்ணீர் வடித்தான். அப்பொழுது கிழவர், பொன்னி எங்கும் போய் விட மாட்டாள்: வருவாள், எழுந்திரு தேடலாம். பொன்னிக்குப் பதில் நாங்கள் இல்லையா உனக்குத் தாய் தந்தை போல' என்று சொல்லிச் சிறிது ஆறுதல் கூறினார்.

செல்வ நம்பி, சிந்தையைச் சிறிது தெளிவித்தான். S. S. L. C. சர்டிபிகேட்டை எடுத்துக் கொண்டான். பழங்கஞ்சி நீர் கொஞ்சம் சட்டியில் இருந்தது.

கொஞ்சம் குடித்து விட்டு, உழவர்களைக் கண்டு இதோ என் விலாசம்; என் தாய் வந்ததும், இந்த விலாசத்துக்குக் கடிதம் எழுதுங்கள். உடனே ஓடி வருகிறேன். நானும் தேடுகிறேன். இப்பொழுது ஒரு நல்லவரிடம், 'நல்லவன்' என்று பெயர் வாங்க வேண்டியுள்ளது. நாணயமாக நடந்து கொள்ள வேண்டும். நான் மறுபடியும் கல்லூரிக்குச் சென்று வந்து சந்திக்கிறேன்' என்று சொல்லும்பொழுது, உழவனின் மனைவி செல்வம்! ஏண்டா இப்படி திடுருண்ணு புறப்பட்டுட்ட......! வீடே பாழாக ஆயிடுதே......ஒலகத்துல பிறந்தவங்கள் எல்லாம் பிழைக்காமலா போயிடப் போறாங்க......! மரம் வச்சவன் தண்ணிஊத்தாமலா போயிடுவான்? போற போக்கு புதுசா இருக்கு இருடா...' என்று கூறினாள். 'ஆமாண்டா செல்வம் நீ இங்கேயே இரு, என்று உழவரும் கூறினர்.

(தொடரும்)

பென்சில் உற்பத்தித் தொழில்

[R. தனலக்ஷ்மி]

நம் நாட்டில் பென்சில் உற்பத்தி மிகவும் குறைவு. ஆண்டு தோறும் ஏராளமாக மேல் நாடுகளிலிருந்து பென்சில்கள் நம் நாட்டுக்கு இறக்குமதியாகின்றன. இதற்குக் காரணம் பென்சில் தொழில் இந்தியாவிலே வளர்ச்சியடையாததுதான். தவிரவும் ஆண்டு தோறும் பென்சில்களை உபயோகிப்போர் பெருகி வருகின்றனர், அதனால் பென்சில் இறக்குமதியும் வளர்ச்சியடைகிறது. ஆகவே, நம் நாட்டில் பென்சில் உற்பத்திப் பெருக வேண்டும். வெளிநாட்டு இறக்குமதியை எதிர்பாராமல் நம் தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

இந்திய நாட்டிலே பென்சில்செய்யும் தொழிலைச்சிறிய அளவு தொழிலாக அமைக்கலாம். (Small Scale Industrial Units).

லெட் (பென்சிலுக்குள் இருக்கும் கருப்புநிற எழுத்தாணி) செய்யும்முறை

லெட் செய்வதற்கு முக்கியமான மூலப்பொருள் கிரிஸ்டலைன் (Crystaline), அமார்பஸ் கிராபைட் (Amorphous Graphiteம், களிமண்ணும். கிரிஸ்டலைனையும், அமார்பஸ் கிராபைட்டையும் 3: 7—4: 6 என்ற விகிதத்தில் சேர்த்துக் கலவை செய்யலாம். ஒரு பங்கு கிராபைட்டுக்கு ஐந்து பங்கு களிமண் சேர்க்க வேண்டும்.

பென்சிலின்மீது H, B,H,B என்ற எழுத்துக்கள், பொறிக்கப்பட்டிருப்பதை பார்த்திருப்பீர்கள். இவை பென்சிலுக்குள் இருக்கும் லெட்டின் கனத்தை (Hardness) குறிக்கிறது. லெட்டின் கனம், மூலப் பொருள்களில் கலவை விகிதத்தை (Ratio) பொருத்திருக்கிறது.

பென்சில் செய்ய உபயோகப்படுத்தும் கிராபைட் என்னும் மூலப்பொருளில், கிரிஸ் டலைனில், கரி அடக்கம்(Carbon Content)97.%-ம், அமார்பஸ் 85%-ம் இருக்கும்படி கலவை செய்யவேண்டும். இந்நாட்டில் உற்பத்தியாகும் களிமண், பென்சில் உற்பத்திக்கு ஏற்றதல்ல. ஏனென்றால், இந்தக் களிமண்ணை சுத்தி செய்ய வேண்டுமென்றால் (Refining) செலவு மிக அதிகமாகும். இதற்கென்று கழுவும் கருவிகள் (Washing Equipment) வாங்கவேண்டும். சன்னமான களிமண்ணை (Refined Clay) வெளி நாடுகளிலிருந்து வரவழைத்துக்கொள்வது நலம்.

(பந்து இயந்திரம்)

மூலப்பொருள்களான, கிராபைட், களிமண் இவை இரண்டையும், பந்து இயந்திரத்தில் போட்டு, இத்துடன், போர்சிலின் உருண்டைகளையும், தண்ணீரையும் ஊற்றி விடவேண்டும். இயந்திரம் சுழலும்போது, இவை அழகாகவும், சன்னமானது மான கிரைன்ஸ் (Grains) உண்டாக்குகிறது. ஒரு நிமிஷத்திற்கு 22 முறை இந்த யந்திரம் சுழலும். ஒரு சமயத்தில் சேர்ந்தாற்போல் 10 மணி நேரம் வேலை செய்யலாம். உயர்ந்தரக பென்சில்கள் உற்பத்திக்கு 50 மணி நேரம் இயந்திரம் வேலை செய்யவேண்டும்.

Filter Press and Drying Chamber

வடிக்கட்டுதலுக்கும், காயவைத்தலுக்குமான இயந்திரம்

18" உள்ள வடிக்கட்டி இயந்திரம், பந்து இயந்திரத்திலிருந்து (Ball Mill) தண்ணீரை எடுப்பதற்காக உபயோகப்படுத்தப்படுகிறது. தண்ணீரை எடுத்த பிறகு, பாக்கி இருக்கும் வடிக்கட்டின பொருள்கள், காயவைக்கும் அறையில் (Drying chamber) காயவைக்கப்படவேண்டும். இதற்காக 110 சதுர அடி உள்ள தரை வேண்டும், 200 கிலோவாட் சக்தியுள்ள மின்சார சூடளிக்கும் (Electric Heaters) உபயோகிக்கவேண்டும். மூன்று முறைகளாக (3 sets) காயவைக்கவேண்டும்.

Baking Kiln மின்சார அடுப்பு

இதற்கு 36 சதுர அடி தரையளவு (Floor Space) வேண்டும். இதனால் ஒரு மாதத்திற்கு 30,000 குரோஸ் பென்சில் உற்பத்தி செய்ய

லாம். உஷ்ண அளவு (Heating temperature) 930 சென்டிகிரேடிலிருந்து 950 சென்டிகிரேட் வரை இருக்கலாம்.

காயவைத்த லெட்டை, க்ருஸிபிளாக (crucibles) 4...5 கிரோஸ்களில் வைக்கப்படவேண்டும் ஒரே சமயத்தில் மின்சார அடுப்பில் 20 முறை (20 Piles) உஷ்ணப்படுத்தலாம். (Baking) ஒரு முறைக்கு அரைமணிநேரம் பிடிக்கும். ஒரு முறையில் (Piece) 150 gross பென்சிலுக்கு வேண்டிய crucibles செய்யலாம். ஆகவே, ஒவ்வொருநாளும் மின்சார அடுப்பிற்கு வேலை இருக்காது. ஆகவே முதலில் 200 pieces க்ருஸிபிள்ஸ் சேர்த்துவைத்துக்கொண்டபிறகு, மின்சார அடுப்பை உபயோகப்படுத்த வேண்டும்.

Wood working Section

மரச்சாமான்கள் (Wooden Materials) சன்னமான பலகைகளை (soft wood) பென்சில் செய்வதற்கு உபயோகிக்கிறார்கள். சாதாரணமாக வெளி நாடுகளில், Incence cedar, Shina, Black Alder, Cryptomeria, Japan Cypress, Pine etc போன்ற மரப்பலகைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. பென்சிலுக்கு வேண்டிய மரபாகம் Saw Mill என்ற இயந்திரத்தில் செய்யப்படுகிறது. Saw Mill என்பது மரத்தைத் துண்டிக்கும் இயந்திரம்.

பென்சில்களில் உபயோகிக்கப்படும் மரபாகங்கள் (wooden slats) மூன்று வகைப்பட்டவை. அவை (1) சாதாரணமானவை (2) வர்ணம் கொடுக்கப்பட்டவை (Syzed (3) உயர்ந்த ரகமான (Superior quality) நல்லரக பென்சில்களுக்கு, வர்மிலியன் (Vermillion) உபயோகிக்கிறார்கள் (2) இன்னும் உயர்ந்த ரகபென்சில்களுக்கு Paraffin உபயோகித்த மரப்பலகைகளை உபயோகிக்கிறார்கள்.

நம் நாட்டில் பென்சிலுக்கு வேண்டிய மரப்பலகைகள் India cedar என்ற மரத்திலிருந்து உபயோகிக்கலாம். இந்த மரம் கடினமானதால் இவை மட்டாக பென்சில்களுக்கு மாத்திரமே உபயோகிக்கலாம்.

பென்சில் செய்வதற்கு தகுதியான மரங்களை இந்தியாவில் உற்பத்தி செய்யும் வரையில், வெளி நாட்டிலிருந்து wooden slats இரக்குமதி செய்துகொள்ளலாம்.

மரத்தை காயவைக்கும் முறை

(Drying of wooden slats)

100 பென்சில்களுக்கு வேண்டிய மரசிலாட்டுகள் (wooden slats), ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில் (Dryer) காயவைக்கும் யந்திரத்தில் உபயோகப்படுத்தலாம்.

மரசிலாட்டுகள், பாரபின் (paraffin) என்ற ரசாயனப் பொருளினால் பக்குவம் (treatment) செய்யப்பட்டு, Dryer இயந்திரத்தில் வைக்கப்படுகின்றன. மரசிலாட்டுகளை (wooden slats) நன்றாகக் காயவைக்கவேண்டும், இல்லையென்றால் பென்சில்கள் வளைந்து போய்விடும்.

Drying Chamber for Glved Slats

பக்குவப்படுத்தப்பட்ட மரத்தை காயவைக்கும் அறையில் வைக்கவேண்டும். இந்த அறைக்கு தரை யளவு 80 சதுர அடி வேண்டும்.

FINISHING SECTION

Coating Machine

ஒரு நாளில், 300 குரோஸ் பென்சில்களை கோட்டிங்செய்யும் சக்தி (Capacity) இந்த இயந்திரத்திற்கு உண்டு. உருவம் கொடுக்கப்பட்ட பென்சில்கள் (Shaped pencils Hopper) என்னு மிடத்தில் வைக்கப்படவேண்டும். இந்த இயந்திரம் Locquest Bottle மூலமாக இயங்குகிறது. வர்ணங்கொடுக்கப்பட்ட பிறகு, பென்சில்கள் "conveyer" என்றசாதனத்தினால்மாற்றப் படவேண்டும். லாக்கரும் மசியும்(Facquere and ink) கன்வேயரினால் (conveyor) மாற்றப்படும்போது காயந்துபோகின்றன.

வர்ணம் கொடுக்கப்படும் முறையை மூன்று பாகமாகப் பிரிக்கலாம்.

1. ஆரம்பம் (initial 2. ink 3. finishing லேக்கர் பாட்டிலையும், ink பாட்டிலையும் சுலபமாக இயந்திரத்தில் மாட்டவும், எடுக்கவும் முடியும். எந்தெந்த வர்ணங்கள் அவசியமோ அவற்றிற்குத் தகுந்த லேக்கரையும், ink யும் உபயோகப்படுத்த வேண்டும்.

பென்சில்கள் செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் லேக்கரும், இங்கும் சீக்கிரம் காயக் கூடியவை.

Stamping Machine

இந்த இயந்திரம் மூன்று வகைப்பட்டவை. அவை யாவன: ஒன்று, இரண்டு, மூன்று பக்கங்கள் உள்ளன. மூன்று பக்கங்களுடைய

இயந்திரம் 6 வளைவு (Hexo-ginol) உள்ள பென்சில்கள் செய்ய உபயோகப்படுத்தப் படுகின்றன. பாக்கியுள்ள இரண்டு இயந்திரங்கள் சாதாரண உருண்டை பென்சில் செய்ய உபயோகப்படுத்தப்படுகின்றன.

பென்சில் செய்யும் தொழிற்சாலையின் பல பாகங்கள்

1. Lead Manufacturing Section

இந்தப் பகுதியில் உள்ள கருவிகள்.

1. பந்து இயந்திரம் Ball Mill
2. வடிக்கட்டி இயந்திரம் Filter Press.
3. காயவைக்கும் அறை Drying Chamber.
4. அரைக்கும் இயந்திரம் Grinding Machine.
5. உரளும் இயந்திரம் Rolling Machine..
6. Pipe Filling Machine.
7. First Screw Press.
8. Second Screw Press.
9. Drying Flate.
10. Paking kiln.

2. Wood working Section

1. Saw Mill (அறுக்கும் யந்திரம்.
2. காயவைக்கும் யந்திரம் Wood Dryer
3. Grooving Machine
4. Tightening Frame
5. காயவைக்கும் அதை Drying Chamber
6. மூலை அறுக்கும் இயந்திரம். Trimming Machine
7. உருவாக்கும் இயந்திரம் Shaping Machine

Finishing Section

1. வர்ணங்கொடுக்கும் இயந்திரம் Coating Machine
2. முத்திரையடிக்கும் யந்திரம். Stamping Machine
3. End cutting Machine
4 Foot Press
5 Scooping Machine

பென்சில் தொழிற்சாலைக்கு வேண்டிய சாமான்கள்

1. Wooden Slat (மரப் பலகை) (1) சாதாரணமானவை (2) வர்ணம் தோய்த்தவை
2. Sacquer.
3. மசி (ink)
4. கிராபைட் (Graphite) 2. Crystalline 3. Earthern.
5. களிமண் (Clay)
6. Crucibles

மேல் கண்ட பொருள்களை ஜப்பான் முதலிய நாடுகளிலிருந்து இரக்குமதிசெய்யலாம்.

இந்தத் தொழிலை ஆரம்பிக்க, தொழில் ஆற்றலும் (Technical knowledge) தொழிற் பயிற்சியும் வேண்டும். பென்சில் தொழிலை ஆரம்பிக்க பிரியப் படுகிறவர்கள் ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் சென்று பயிற்சிப் பெற்ற பிறகு, நம் நாட்டிலே தொழிலை ஆரம்பிக்கலாம்.

MANIYAM INDUSTRIAL & ENGINEERING WORKS,

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. S. 5.)

A. C C. CEMENT STOCKIST

32, Sankari Road, Trichengode, (Salem Dt.)

(சென்னை அரசினர் உதவி பெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப் பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக்கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

வெற்றிலை ஏற்றுமதியை அனுமதிக்கவும்

ராஜ்ய வெற்றிலை வியாபாரிகள் மகாநாட்டு தீர்மானங்கள்

சென்னை ராஜ்ய வெற்றிலை உற்பத்தி, விற்பனையாளர் 3வது மாகாண மகாநாடு ஜூலை 30-ம் தேதி மாலை ஸ்ரீ கே. டி. கோசல்ராம் எம். எல். சி. தலைமையில் நடைபெற்றது.

"தொழில்" ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் தேசீயக் கொடியை ஏற்றிவைத்துப் பேசுகையில் விவசாயிகளின் குறைகளை உணர்ந்து அவற்றைத் தீர்த்துவரும் ஸ்ரீ காமராஜைப் பாராட்டியதுடன், சிறு தொழில் வர்த்தகர்களின் குறைகளை எடுத்துக் கூறி, வெற்றிலை உற்பத்தியாளர்களுக்கு சாகுபடி செய்ய நிலம் கிடைக்கச் செய்வதிலுள்ள இடையூறுகளை அரசாங்கம் நீக்குமென நம்பிக்கை தெரிவித்தார். தேசம் முன்னேறவும், நமது திட்டங்கள் நிறைவேறவும் அதிகாரிகளிடையே கடமையுணர்ச்சியும், மனமாற்றமும் தேவை என்று கூறினார்.

வரவேற்புக்கமிட்டியின் பொதுக்காரியதரிசி ஸ்ரீ எஸ். சூரியநாராயணன், எல்லோரையும் வரவேற்றுப்பேசுகையில், வெற்றிலைக்கொடிக்கால் விவசாயிகளின் குறைகளைக் குறிப்பிட்டு, சர்க்காரின் விவசாயச் சட்டத்தினால் கொடிக்காலுக்கு நிலம் கிடைப்பது பாதிக்கப்பட்டுள்ளதென்றும், உடனடியாகத் தக்க பாதுகாப்பு அளிக்காவிட்டால் லட்சக்கணக்கான வெற்றிலை விவசாயிகள் வேலை இழப்பார்களென்றும், வெற்றிலைத் தொழில் அழிந்துவிடுமென்றும் கூறி, வெளிநாடுகளுக்கு வெற்றிலையை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கவேண்டுமெனவும், வெற்றிலைக்கு மீண்டும் விற்பனைவரி விதிக்கக்கூடாதெனவும் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ கே. டி. கோசல்ராம் M.L.C. தனது தலைமையுரையில், விவசாயிகளைப் பாதுகாக்க இயற்றிய சட்டம் கொடிக்கால் விவசாயிகளைப் பாதிக்கிறதென்றும், இந்த நிலைமையை நன்றாக ஆலோசித்து அவற்றைத் தக்கவாறு திருத்தலாமென்றும், நாட்டில் எந்த தொழில் பாதித்தாலும் அரசாங்கம் கஷ்டமடையுமென்றும் கூறிவிட்டு, கோரிக்கைகளைத் தெளிவாக எடுத்துச் சொன்னால் அரசாங்கம் ஆவன செய்யுமென்றும், வெளிநாட்டிற்கு வெற்றிலை ஏற்றுமதி செய்ய கூட்டுறவு சங்கம் அமைத்து அதன் மூலம் செயல்படவேண்டுமென்றும் கூறினார். முடிவில் வெற்றிலை உற்பத்தி, விற்பனையாளர்களின் பிரச்னைகளைத் தீர்க்க தனது ஒத்துழைப்பை அளிப்பதாகவும் உறுதிகூறினார்.

மகாநாட்டைத் திறந்துவைத்து ஸ்தல ஸ்தாபன மந்திரி ஸ்ரீமதி லூர்தம்மாள் சைமன் பேசுகையில், வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளின் பிரச்னையைத் தீர்க்க என்ன செய்யலாம் என்று யோசிக்கவேண்டுமென்றும், நிலமாற்றம் கடினமானது என்றும், அதிக நிலமிருப்பவர்களிடமிருந்து மாற்றுவது சுலபமல்லமென்றும், எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் நிவர்த்திக்கலாமென்றும் கூறினார். ஸ்தல ஸ்தாபன மந்திரிமேலும் பேசுகையில் கூறியதாவது:—விவசாயிகள் உரிமைகளைக் கேட்கிறார்கள். ஒற்றுமையாக இருந்தால் பிரச்னைகளை சுலபமாகத் தீர்த்துவிடலாம். கட்சிப் பாகுபாடு இருந்தால் எவ்வாறு முன்னேற முடியும்? வெற்றிலை விவசாயிகளின் பிரச்னை மற்ற விவசாயிகளின் பிரச்னைபோல் இல்லை. அன்னிய நாடுகளுக்கெல்லாம் வெற்றிலையை அனுப்பிவந்தோம். சிலோனுக்கு நாள் ஒன்றுக்கு இருபது டன் வெற்றிலை வீதம் அனுப்பிவந்தோம். வெற்றிலையில் வைட்டமின் ஏ. சி. சத்துக்கள் இருப்பதால் உணவுச் சத்து நிறைந்ததாக இருக்கிறது. ஆனதால்தான் வெற்றிலைக்கு நல்ல மதிப்பு. கொடிக்காலுக்கு ஏற்படும் பூச்சியைத் தடுக்க ஆராய்ச்சி நடத்தி, மருந்து கண்டுபிடித்துள்ளோம். உங்கள் பிரச்னைகள் தீர நல்ல யோசனைகளைக் கூறினால் அரசாங்கம் ஆவன செய்யும்.

ஸ்ரீ எம். எஸ். செல்வராஜ் எம். எல். ஏ. பேசுகையில்,

கொடிக்காலுக்கு நிலம் கிடைக்கச் செய்வதிலும், பாதுகாப்பளிப்பதிலும் சட்டப்பிரச்னைகளை கவனிக்க வேண்டியிருக்கிறதென்று கூறிவிட்டு, சங்கத்தின் மூலமாக கூட்டுறவு முறையில் வட இந்தியாவின் பகுதிகளில் நல்ல மார்க்கட் தேடலாமென்றுகூறியதுடன், வெற்றிலைக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டிய தன் அவசியத்தையும் வலியுறுத்தினர்.

ஸ்ரீ ஜி. ஹரிஹரசுப்ரமணியம் பேசுகையில், வெற்றிலை விவசாயிகளின் கஷ்ட நஷ்டங்களை விளக்கிக் கூறிவிட்டு, வெற்றிலைக்கு மீண்டும் விற்பனைவரி விதிக்கப்படுவதைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

இன்று நடைபெற்ற மகாநாட்டிற்கு பூரண ஆதரவு தெரிவிக்கும் முறையில் திருநெல்வேலி ஜில்லா வெங்கிலுமுள்ள சுமார் ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட கொடிக்கால் விவசாயிகளும் வேலை நிறுத்தம் செய்ததும், வெற்றிலை வியாபாரிகள் கடையடைப்புச் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

தீர்மானங்கள்

1. சென்னை ராஜ்ய சாகுபடியாளர் பாதுகாப்பு மசோதாவின் மூலம் கொடிக்கால் விவசாயிகளுக்கு வெற்றிலை பயிரிட நிலம் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் அவர்களுக்கான நிலப்பிரச்னைக்கு பரிகாரம் காண, (1) கொடிக்கால் விவசாயத்திற்கான நிலத்திற்கு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்தும், அல்லது (2) கொடிக்கால் விவசாயிகளுக்கு பரிவர்த்தனையின் மூலம் நிலம் கிடைக்க வகை செய்தும் தக்க பாதுகாப்பு அளிக்கும்படி இம்மகாநாடு ராஜ்ய சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

2. நியாய வாரச்சட்டத்தின் அனுகூலம் கொடிக்கால் விவசாயிகளுக்கும் கிடைக்குமாறு செய்ய ஆவன செய்யுமாறு அரசாங்கத்தைக் இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

3. ராஜ்யமெங்கிலுமுள்ள கொடிக்கால் விவசாயிகளுக்கு கடன் உதவி செய்ய கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்துவதில் ஏற்படும் தாமதத்தைப் போக்கத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. வெற்றிலை அதிவிரைவில் கெட்டு விடக்கூடிய அழிதல் பொருள் என்பதைக் கருதி ஏற்கனவே, விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருந்ததை தொடர்ந்து நீடிக்குமாறு ராஜ்ய அரசாங்கத்தை இம்மகாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

5. பாகிஸ்தான், பர்மா, சிலோன், மலேயா, ஆப்ரிக்கா போன்ற வெற்றிலைக்கு கிராக்கி உள்ள பகுதிகளுக்கு வெற்றிலையை தாராளமாக ஏற்றுமதி செய்ய அனுமதிக்குமாறு மத்திய சர்க்காரை இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

6. மத்திய சர்க்காரின் உத்தரவிற்கிணங்க எல்லா ரயில்வே நிலையங்களிலும் புக்கிங் செய்யப்படும் வெற்றிலைச் சுமைகளை துரிதமாக எடுத்துச் செல்லவும், அதற்கான நடவடிக்கை எடுக்கவும் ஆவன செய்யுமாறு ரயில்வே இலாகாவை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

சிறு உற்பத்தியாளருக்கு மார்க்கெட் தகவல்கள்

தனிப்பட்ட சிறு ரக உற்பத்தியாளர்களுக்கு மார்க்கெட் ஆராய்ச்சி சம்பந்தமான உதவிகளை அளிக்கும் திட்டம் ஒன்றை புதுடில்லி, கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய விடங்களிலுள்ள "சிறுதொழில் உதவி நிலையங்கள்" ஆரம்பித்திருக்கின்றன. அந்தத்திட்டம் "உற்பத்தியாளர்களுக்கு வினியோகசர்வே" என்று குறிப்பிடப்படும்.

சர்வேக்களின் பலனாய், உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளைப் பிரதானமாய் எங்கெல்லாம் விற்பனை செய்ய வாய்ப்பிருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளவும் முக்கியமான மொத்த, சில்லறை விற்பனையாளர்களிடம் தொடர்பு கொள்ளவும் வழிகிடைக்கும். உற்பத்திப் பொருள்களின் விலைகள் தொழில்நுட்பத்தரம், தயாரிப்புகளின் அமைப்பு ஆகிய வற்றைப்பற்றிவியாபாரிகள், உபயோகிப்பவர்கள் ஆகியோர் என்ன நினைக்கிறார்கள் என்ற தகவல்கள் சேகரிக்கப்பட்டு உற்பத்தியாளர்களுக்குத் தரப்படும்.

ஆந்திரப் பிரதேசம், கேரளா, சென்னை, அமீன் தீவு, லக்ஷத் தீவுகள், மினிக்காய்த்தீவுகள் ஆகியவிடங்களிலுள்ள தயாரிப்பாளர்கள் மார்க்கெட் ஆராய்ச்சி சம்பந்தமான அந்த விவரங்களை 20, ரட்லண்ட்கேட். சென்னை-6 என்ற விலாசத்திலுள்ள சிறுதொழில் உதவி நிலைய டைரெக்டரிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

Please Contact Us

For all your Iron & Steel Consumer goods Requirements of

Door Hinges, Door Pegs, Wall Pegs, Gate Pegs, Chains, Rings,

Nagapasams, Rose Handnails, Flat Headnails Hand Nails,

Brass Nails Iron Oven.

&

Agricultural Implements, Sugarcane Pans G. I. Kawalaisal, G. I. Sals, Buckets,

Pots, Drums, Thavas, Cake Pans, Oil Bonds, Cakepipes (Iron & Brass)

Etc., Etc., Etc.

★

P. SUBRAMANIYA CHETTY

(Government Approved Fabricator)

Iron and Hardware Merchants,

Manufacturers and Wholesale suppliers of Consumer Goods.

H. O:	BRANCH:
8/21, Wall Tax Road	94, Rasappa Chetty Street,
MADRAS-3	MADRAS-3

Office: 32-A, Wall Tax Road, Park Town Madras-3

நெல்லை மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவு விற்பனை சங்கக் கூட்டம்

ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்கள் தலைமை வகித்தார்

30.7-58 இரவு சங்கக் கூட்டம் சென்னை நகரசபை ஆல்டர்மனும், "தொழில்" பத்திரிகையின் ஆசிரியருமான ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்கக் காரியதரிசி ஸ்ரீ ச. நல்லக்கண்ணு வேளார் தலைவர் அவர்களையும், மற்றவர்களையும் வரவேற்றுப் பேசினார்.

தலைவர் ஸ்ரீ K. பெருமாள் உடையார் அவர்கள் தம் தலைமை உரையில் மண்பாண்ட உற்பத்தியாளர்களுக்கும், செங்கல் உற்பத்தியாளர்களுக்கும், அரசாங்கம் காட்டும் சலுகைகளைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். காலனி கட்டும் திட்டம், மண் எடுக்கப் புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்தல், காட்டு விறகுகளை 5 டன்னுக்குக் குறையாமல் நேரடியாய்ச் சகாய விலையில் பெற்றுக் கொள்ளுதல், ஜில்லா வாரியாகச் சங்கங்கள் நிறுவி தங்கள் குறைகளை அரசாங்கத்துக்கு அறிவித்துக் கொள்ளுதல் இவையெல்லாம் அரசாங்கத்தினரிடமிருந்து கிடைப்பதாக உள்ளச் சலுகைகள் என்றும் குறிப்பிட்டார். சங்கங்களின் மூலம் தான் தொழில் வளர்ச்சியுற முடியுமென்றும், தொழிலார்வங் கொண்டோர் ஊக்கமாயும், உறுதிவாயும் உழைத்து தொழில் வளர்ச்சிக்கானவற்றைச்செய்து நாட்டின் முன்னேற்றத்துக்கான தூண்களாய் விளங்க வேண்டுமென்றும் விரிவாயும் விளக்கமாயும் பேசிமுடித்தார்.

அதன்பின் இராஜபாளையம் ஸ்ரீ S. செல்லையா, மதுரை ஸ்ரீ A. S. ராமசாமி, தென் திருப்பதி ஸ்ரீ. A. சுப்பையா வேளார், பாளையங்கோட்டை ஸ்ரீ V. ஸ்ரீனிவாசன் B. A. B. T. ஆகியோர், கல்வி ஒற்றுமை, சிறுதொழில் அபிவிர்த்தி, சமூக முன்னேற்றத்திற்காக கிராமப் பகுதிகளில் பிரசாரம் செய்ய பயிற்சியாளர்களைத் தயாரிக்க வேண்டியதின் அவசியம் முதலியவைகளைப் பற்றி விரிவாகப் பேசினார்கள். தலைவரின் முடிவுரைக்குப்பின் ஸ்ரீ ச. ராமசாமி வேளார் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது. அவ்வமயம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று.

தீர்மானங்கள்

குலால ஏழை மக்களுக்கு சர்க்காரின் புறம்போக்கு நிலங்கள் ஜாரி செய்ததுடன் நின்றுவிடாது பொருளாதாரத்திலும், கல்வியிலும் மிகவும் பின் தங்கிய மக்களாகிய மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு காலனிகள் அமைத்துக கொடுத்து ஏழை குலால மக்களை ஊக்குவிக்குமாறு அரசாங்கத்தையும், கனம் தொழில் மந்திரி அவர்களையும் இக்கூட்டம் வேண்டிக் கொள்கிறது.

MANUFACTURERS & MERCHANTS OF
BURMAH TEAKWOOD BARRELS & TUBS.
★
Please contact;
V. DORAIKANNU & CO.,
Sole Prop- M- Venkatesam Chettiar
35, Wall Tax Road, Madras-3.

வட இந்தியாவிற்கு வெற்றிலை வியாபாரிகள் தூது செல்ல முடிவு

—○—

தென் ராஜ்யங்களின் வெற்றிலை வியாபாரிகள் சம்மேளனத்தின் காரியக் கமிட்டியின் கூட்டத்தில், பாகிஸ்தான், ஆப்ரிக்கா, பர்மா, சிலோன், மலேயா ஆகிய வெளிநாடுகளுக்கு வெற்றிலையை ஏற்றுமதி செய்ய அனுமதிக்குமாறு மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டு தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

பம்பாய், உத்தர பிரதேசம், மேற்கு வங்காளம் உள்ளிட்ட பல்வேறு வட இந்திய மாகாணங்களிலுள்ள கொடிக்கால் விவசாயத்தின் நிலைமை, அங்கு நடைபெற்ற நோய் தடுப்பு ஆராய்ச்சி இவைகள் பற்றி தெரிந்து வரவும், வெளிநாட்டிற்கான வெற்றிலை ஏற்றுமதி கண்ட்ரோலர் உள்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவும் ஸ்ரீ. எஸ். சூரியநாராயணன், ஜனாப். ஏ. டி. அப்துல் கபூர் சாய்பு, ஜனாப். கே. ஏ. முகமது ஆஜம் சாய்பு ஆகியோரைக் கொண்ட தூதுக்குழு ஒன்றை வட இந்தியாவின் பகுதிகளுக்கு அடுத்த மாதம் அனுப்புவதெனவும் கமிட்டி முடிவு செய்தது.

S. சூரியநாராயணன்.

கதை, கட்டுரை, கவிதை எழுதியனுப்புவோர் காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதி தங்கள் முழு விலாசத்தையும் குறிப்பிட வேண்டும். பிரசுரமாகாதவற்றை திருப்பிப்பெற விரும்புவோர் அதற்கான தபால் முத்திரையும் சேர்த்தனுப்பவும்.

ஆசிரியர்.

செல்லப்பா நீ சொல்லப்பா!

(ஆ. முனிரத்தினம்)

——○——

உலகினில் பிறந்திட்டோம் செல்லப்பா—இனி
உயிர் வாழவேண்டாமா சொல்லப்பா?
நிலமதில் பொருள்தேட என்றென்றும்—ஒரு
நிகரிலா தொழில் செய்யவேண்டாமா.

இயக்கப் பொறிகளுண்டு மேல் நாட்டில்—அதை
இயக்கவும் ஆட்களுண்டு அந்நாட்டில்
வியத்தகு மூலப்புதுப் பொருள்களெல்லாம்—இங்கு
விலைக்கூறி விற்கின்றோரு மந்நியர்க்கு
சோம்பித் திரிவதால் செல்லப்பா—நமக்கு
சுகமுண்டா, செல்வமுண்டா சொல்லப்பா?

பிறப்பினில் நமக்குள்ளே செல்லப்பா—ஒரு
பேதமும் கண்டிலோம் செல்லப்பா
சிறப்புடைத் தொழில்களை யென்னாளும்—நாம்
சேர்ந்தே செய்வதற் கென்னப்பா.

போஷாக்குள்ள உணவுப் பொருள் தயாரிப்பு

——

மைசூரிலுள்ள மத்திய உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையம், சத்து நிறைந்த சமநிலை உணவுப் பொருள் ஒன்றின் தயாரிப்பு முறையைச் சமீபத்தில் கண்டு பிடித்திருக்கிறது. இந்த உணவுப் பொருளில், போஷாக்குப் பொருள்கள் அனைத்தும், திரட்டுப் பொருள் ரூபத்திலும், ருசித்து உண்ணக் கூடிய வகையிலும் இருக்கின்றன. இவ்வுணவுப்பொருளை வயது வந்த குழந்தைகள், பெரியவர்கள் ஆகியோரின் ஆகாரத்தில், பாலுக்குப் பதிலாக உபயோகித்து வரலாம்.

இந்த உணவுப் பொருளைப்பின்வரும் முறையில் தயாரிக்கலாம். முதலில் சோளம், ராகி, கோதுமை போன்ற தானியங்களில் முளைவிட்டு காய வைக்கப்பட்ட தானியங்களின்தோலை நீக்கி அவற்றை சன்னமான தூளாக அரைத்து எடுத்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு சன்னமாக்கப்பட்ட தூளைப் கடலைப் பின்னுக்கிலிருந்து தயாரிக்கப்பட்ட கடலைப் பின்னுக்கு மாவுடன் கலந்துகொள்ள வேண்டும். இக்கலவையுடன் வறுத்தபயற்று மாவு, ஏடெடுத்த பால்தூள், சர்க்கரை ஆகியவற்றைத் தகுந்த அளவுக்குச் சேர்த்துக் கொள்ளவேண்டும். பின்னர் அக்கலவையில் பி. ஏ. தொகுதி வைட்டமின் கலந்து அதற்கு வலுவூட்டவேண்டும். ஏ. பி. ஈ. வைட்டமின்களை வனஸ்பதி எண்ணெயில் கலந்து அத்துடன் சேர்க்கவேண்டும். பின்னர் உப்பு சேர்த்து உணவுக் கலவையைத் தயாரிக்கலாம்.

தியாகியின் உள்ளம்

[பி. ஹரி ஹர புத்திரன், பி. ஏ.]

புகை வண்டி மணியாச்சியை விட்டு நகர்ந்து கொண்டிருந்தது. வண்டி ஓடிக் கொண்டிருக்கும் பொழுது, ஐம்பது வயது மதிப்பிடத்தக்க ஒரு ஆள் வண்டிக்குள் தாவி ஏறினர். அந்தத் தாவல் பேர் வழிக்கு ஒரு கை மட்டுமே இருந்தது. சென்னை நகரத்துப் பஸ்களில் கூட அவை நகர ஆரம்பித்து விட்டாலே ஏறுவதற்குப் பயப்படும் எனக்கு இது மிகுந்த ஆச்சரியத்தை விளைவித்தது.

'கிழ வயதில் இவ்வளவு மிடுக்காக இருக்கும் இந்த ஆள் சின்ன வயதில் என்னென்ன வேலைகளெல்லாம் செய்திருப்பான்!' என்று என்மனதிற்குள்ளாகவே நினைத்துக் கொண்டேன்.

"ஐயா கொஞ்சம் உக்கார எடம் கொடுக்கிறீகளா?" என்று என்னை நோக்கிக் கேட்டான் அவன்.

என் பக்கத்தில் இருந்த பையை எடுத்து மடிமீது வைத்துக் கொண்டு அவன் உட்கார இடம் கொடுத்தேன்.

அந்த ஆள் ஆறடி உயரத்திற்கு மேல் இருப்பான். உடம்பெல்லாம் அடர்ந்த ரோமக் கட்டுடன் கரடியைப் போல் காணப்பட்டான். மேலே துண்டு கூடப் போட்டுக்கொண்டிருக்க வில்லை. இடையிலே நாலு முழம் வேட்டி, கையிலே ஓர் சிறிய பை. வஜ்ரம் பாய்ந்த உடற்கட்டு. அந்தக் காலத்தில் "ராவணன்" வகையாருக்கள் இப்படித்தான் இருந்திருப்பார்கள் போலும் என்று எண்ணிக் கொண்டேன். வயோதிகம் கொஞ்சம் கூடத் தட்டவில்லை. ஆள் கருப்பண்ண சாமியைப் போல் வாட்டசாட்டமாகக் கடைந்தெடுத்த உருவம். வாய் நிறைய வெற்றிலையைப் போட்டுக் கொண்டிருந்த அவன் ஒரு சாண் நீளமுள்ள புகையிலையை மடக்கித் தன் வாய்க்குள் திணித்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

சென்னையிலிருந்து, தூத்துக்குடியில் நடக்கும், என் நண்பன் மாரிச்சாமியின் கல்யாணத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். கரக்பூரில் ரயில்வே இலாக்காவில் எஞ்சினியர் உத்தியோகம் பார்க்கும் அவனுக்குத் தூத்துக்குடியில் கலியாணம். தம் கல்யாணத்திற்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே மாப்பிள்ளை அங்கு போய்விட்டான். லீவு கிடைக்காததால் நான் கல்யாணத்திற்கு ஒரு நாள் முன்னதாகப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தேன்.

வழக்கத்திற்கு மாருக அதிகக் கூட்டமில்லாமல் இருந்தது. இதுவரை யாருடனும் பேசாமல்; புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். புத்தகமும் முடிந்து விட்டது. எனவே அந்தக் கிழவனுடன் பேச எனக்கும் மகிழ்ச்சியாகவே இருந்தது.

"ஐயா எங்கே போறீக?". என்ருன்.

"கல்யாணத்திற்குப் போகிறேன்" என்றேன்.

"உங்களுக்குக் கல்யாணமெல்லாம் ஆச்சா?"

"இன்னும் இல்லை"

கிழவன் சற்று ஆச்சரியமாகப் பார்த்தான். எனக்கு வயது இருபத்தாறுதான் ஆகிவிட்டபோதிலும் குடும்பக் கவலைகளால் சற்றே மூத்தவனகத் தோன்றினேன். என்னைப் பார்த்தால் வயது முப்பது என்று கூறத் தோன்றும்.

"எங்கிருந்து வர்ரீக?" என்று மீண்டும் பேச்சை ஆரம்பித்தான்.

"சென்னையிலிருந்து" என்றேன்.

"அடேயப்பா, அம்மாந் தூரத்துலேந்து வர்ரீகளே ரொம்ப அலுப்பா இருக்குமே!" என்ருன்.

"ஆமாம்".

உண்மையிலேயே மிகவும் அலுப்பாகத்தான் இருந்தது. தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் வழக்கம் போல மிகவும் தாமதமாகத் தான் ஓடிக் கொண்டிருந்தது. மதுரையைத் தாண்டியவுடன் அது கட்டை வண்டி வேகத்தில் ஓடுவது போல் இருந்ததால் இன்னும் 'போரா' கத்தான் இருந்தது. நண்பனின் திருமணத்திற்குப் போகிரேம் என்ற உணர்ச்சிதான் எனக்குக் கொஞ்சம் உற்சாகத்தை யளித்த டானிக்!

"அங்கே என்ன வேலை செய்றீக" என்ருன். அவன்.

நான் சென்னை செகரெட்டேரியட்டில் வேலை பார்க்கி

றேன் என்று சொன்னால் அவனுக்கு எப்படிப்புரியும் என்று நினைத்துக் கொண்டு "அங்கே நம்ம மந்திரிகளெல்லாம் இருக்கிருங்கல்ல, அந்த ஆபீசில் வேலை பார்க்கிறேன்" என்றேன்.

"ஓ அப்ப ரொம்பப் பெரிய உத்தியோகந்தான். என்ன சம்பள முங்க சாமி?" என்ருன்.

உள்ளூரச் சிரித்துக்கொண்டு "நூற்றைம்பது ரூபாய்" என்றேன்.

"பின்னே ஏஞ்சாமி இன்னம் கல்யாணம் செஞ்சுக்காமே இருக்கிறீக?"

கிழவனின் கேள்விக்கு எப்படி பதில் அளிப்பதென்று புரியவில்லை. சென்னையில் உள்ள வாழ்க்கைத் தரத்திற்கும் என் குடும்ப நிலைக்கும் அது "யானைப் பசிக்குச் சோளப் பொறி" என்று எப்படி அவனுக்குக் கூறுவது? கல்லூரியில் படித்து முடித்துவிட்டு நான்கே நாட்கள்தான் மதுரையில் என் வீட்டில் ஓய்வெடுத்துக்கொண்டேன். பிறகு சென்னைக்கு வந்து சேர்ந்தேன். வேலைக்காக நான் கொஞ்சம் கூடக் கஷ்டப்படவில்லை. வேலை எனக்காகக் காத்திருந்ததுபோல் கிடைத்தது. முதலில் எண்பத்திரண்டு ரூபாயில் ஓர் உத்தியோகம்; பிறகு நூற்று நாற்பதுக்குப் பிரமோஷன். ஒருவருடத்திற்குப்பின் நூற்று ஐம்பதாகக் கிடைத்துக் கொண்டிருந்தது. வீட்டிற்கு மூத்த மகன் நான். குடும்பமோ பெரிது. வீட்டில் என்னுடைய வருமானத்தை எதிர்பார்த்து ஆறு ஏழு ஜீவன்கள். என் சவுகரியங்களில் பலவற்றைக் குறைத்துக்கொண்டு வீட்டிற்கு இயன்ற மட்டும் பணம் அனுப்பிக்கொண்டிருந்தேன் வாழ்க்கைச்சகடம் எப்படியோ ஓடிக்கொண்டிருந்தது. இதற்கிடையில் 'கல்யாணம், கல்யாணம்' என்று என்னைப் பார்க்கும் உறவினர்கள் நச்சரிக்க ஆரம்பித்தனர். அம்மாவும் அப்பாவும் கூட எனக்குக் கல்யாணத்தைச் செய்துவைத்து விடவேண்டும் என்று பிடிவாதம் பிடித்துக்கொண்டிருந்தனர். நான்தான், கல்யாணம்வேறு செய்துகொண்டு, இத்தனை கஷ்டத்திற்கிடையில், எப்படிக் குடும்பம் வைத்து நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்வது என்று பயந்து கொண்டே "இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் பார்க்கலாம்" என்று கூறி நாளைக் கடத்தி வந்தேன், எல்லாமே எனக்குத் தாங்க முடியாத சுமை! தாங்க முடியாத பாரம்!

"நூற்றைம்பது ரூபாயிலே தங்கமாட்டமா கலியாணம் பண்ணிக்கிட்டு சோக்காக குடும்பம் நடத்தலாமே சாமி" என்ருன் அவன்.

"அதைஏய்யர் கேட்கிறே, மெட்ராசிலே அதெல்லாம் போதாத சம்பளம்" என்றேன்.

"சாமி! அப்ப என் கதையைக் கேட்டிங்கன்னு சிரிப்பீங்க. அந்தக் காலத்திலே நாங்கல்லாம், இதைப்பத்தி ரோசனை செஞ்சதே இல்லை சாமி. ஆம்பளையாப் பொறந்தா, அவன் எப்படியிருந்தாலும், ஒரு கால் கட்டுப் போட்டாகணும்.

நான் பத்து வயதுப் பையனுக இருந்தப்ப எங்க அப்பாருக்கு ஒரு அஞ்சு ஏக்கரா பூமி இருந்திச்சுங்க. அப்பவே நான் நல்லாத் தண்டியா இருப்பேனுங்க. காலம்பர எழுந்து போய்ப் பாதி வயக்காட்டை உழுது போட்டிடுவேன். பாத்தி வெட்டுவேன், எல்லாஞ் செய்வேன். எங்கப்பாரும் பகலெல்லாம் நல்லா வேலை பார்ப்பாரு. அந்தியிலே நல்லாக் குடிப்பாரு. ராத்திரியெல்லாம், எங்கம்மாளைப் போட்டு அடி அடின்னு அடிப்பாரு. நான் இதையெல்லாம் காதிலே போட்டுக்காமே, வெளியே திண்ணையிலே படுத்துத் தூங்குவேன். ஒரு நாள் அம்மா போட்ட சப்தம் அதிகமாச்சு. உள்ளே போய்ப் பார்த்தேன். அப்பா வெறகுக் கட்டையை எடுத்து அம்மாவை நல்லா அடிச்சிக் கொண்டிருந்தாரு. "அட ஏம்பா இப்படிக் கொல்றே"ன்னு கேட்டேன். அவ்வளவு தான்.

"பயமவனே, அவ்வளவு திமிறு புடிச்சுப் போச்சா உனக்கு? எம்பொண்டாட்டியை நான் அடிக்கிறதுக்கு நீ என்னடா கேக்கிறது"ன்னுட்டு எம்பக்கம் திரும்பிக்கிட்டாரு.

கொஞ்ச நாளைக்கப்புறம் எங்கம்மா நெறை மாசமா இருந்தா. அன்னைக்கும் எங்கப்பா குடிச்சுப்புட்டு வந்து அம்மாவை அடிச்சாரு. ஏதோ படாத எடத்துலே பட்டு அதே நோயாய்ப் படுத்து உசுரை விட்டாள். அப்புறம் எங்கப்பாருக்கும் நாளு வந்திடிச்சு, சடுதியிலே போயிட்டாரு. அப்ப வயசு எனக்குப் பத்துப் பண்ணிரண்டு தான்.

அப்போ திரும்பின என் மனசு, மறுபடியும் மாறவே இல்லை. குடி கெடுக்கிற கள்ளை நம் நாட்

டிலேயிருந்து ஒழிச்சிக்கட்ட வழிபிறக்காதான்னு ஏங்கிக் கிடந்தேன். அப்போ காந்தி மகாத்மா கள்ளுக்கடை மறியல் போராட்டம் ஆரம்பிச்சாரு. நான் அதிலே முழு ஊக்கத்தோட ஈடுபட்டு உழைச்சேன். கள்ளுக்கடை முன்னாலே நின்னு மறியல் பண்ணிக்கிட்டிருக்கையிலே போலீஸ் புலி ஒருத்தன் என்னை இழுத்துக்கீழே தள்ளி குண்டாந்தடியால் கண்டபடி அடிச்சிநொறுக்கினான். அந்த அடி எசை பெசகாய் என்கை முட்டிலேபட்டு எலும்பு முறிஞ்சிட்டு. அதனாலே, இந்தக் கையையே எடுக்கும்படியாயிட்டு. இப்படியெல்லாம் அடிப்பட்டு உதைப்பட்டு, கைகால் முறிய பாடுபட்டதாலே ஏழைக்குடிகளைக் கெடுத்து வந்த கள்குடி ஒழிஞ்சிது. அதையடுத்து • சுதந்தரமும் கிடைச்சிட்டு, இப்போ நீங்க எல்லாம் நம்ம சொந்த அரசாங்கத்திலே உத்தியோகம் பண்ணுறிங்க. இதையெல்லாம் நினைச்சால் என் மனம் ஆனந்த வெள்ளத்திலே அழுந்திடுது.

கைபோனதுக்கப்புறம் இருந்த பூமியையும், வீட்டையும், கள்ளுக்கடைக்காரன் கடனுக்கு எடுத்துக்கிட்டான். எனக்குச் சொந்தக்காரங்க யாரும் அங்கே கிடையாது. எங்க ஊருக்கணக்கப்பிள்ளை ஐயா என்னைக் கூப்பிட்டு வெச்சுக்கிட்டாரு. அவரு நிலத்துக் காரியங்களையெல்லாம் நான் கவனிச்சுக்கிட்டேன். அவரும் என்னைத் தன் பிள்ளையைப்போல் வளர்த்தாரு.

ராத்திரியிலே திண்ணையிலே படுத்திருப்பேன். "பெரிய மாடா"ன்னு வாய் நிறையக் கூப்பிடுவாரு. "ஐயா"ன்னு ஓடிப்போய்க் கேட்பேன்.

"சாப்பிட்டாயாடா" ன்னு தினமும் கேக்காமல்இருந்ததேயில்லை. "அந்தஊருலே எல்லாருமே என்கிட்ட அன்பாத்தான் இருந்தாங்க. சுருக்கமாக சொல்லப்போனா அந்த ஊருலே உள்ள அத்தனை பேருமே எனக்குத் தாயும் தகப்பனும் போலத்தான்."

"எனக்கு வயசு பத்தொம்பது ஆச்சு" ரெண்டு கைகளாலே ஒம்பது ஆள்கள்பாக்கிறவேலை அத்தனையும் நான் ஒரு கையாலே பார்த்து வந்தேன்."

"ஒருநாள் குளத்தாங்கரைக்கி, எருமை மாட்டை ஓட்டிக்கிட்டுக் குளிப்பாட்டப் போனேன். அங்கே வீராயி தண்ணீர் எடுத்துக்கிட்டிருந்தா. என்னைப்போல் அவளும் அனாதை. மணியகாரர் வீட்டிலே வேலைபார்த்துக்கிட்டிருந்தா அவளுக்கு ஒரு கண் ஊனம்.

அன்னைக்கி அவ தண்ணி எடுத்துக்கிட்டிருந்த பக்கமா மாட்டை ஓட்டிப்போனேன்.

"இந்தா! திமிரு சர்ஸ்தியாய் போச்சா? கணக்கப்பிள்ளை ஐயா வீட்டுச் சோறு உனக்குக் கண் தெரியாமப் பண்ணுது. தண்ணி எடுத்துக்கிட்டிருக்கிற பக்கமா மாட்டை ஓட்டியாரியே" என்றாள்.

அப்பொழுது அவள் தண்ணீர் மொண்டு வைத்த தவலைக் குள்ளிருந்து ஒரு சிறிய தவளை தாவிக்குதிச்சுது.

"நீ என்ன பண்ணுவே. எல்லாருக்கும் போலரெண்டு கண்ணும் உனக்கிருந்தா, இப்படித் தவளையையும் பிடிச்சுக்கிட்டுப் போவியா" என்றேன்.

" எங்கிட்டே - அதெல்லாம் வெச்சுக்காதே. அந்த மிச்சமிருக்கிற ஒரு கையையும் ஒடைச்சுவிட்டுடுவேன்'னு சொல்லிட்டுத் தவலையைத் தூக்கி வீசுக்குன்னு இடுப்பிலே வெச்சுக்கிட்டுப் போயிட்டா.

எனக்கென்னமோ என் மனசும் அவ பின்னாலேயே போனது போலத்தோணிச்சு.

இப்படித் தினமும்ரெண்டு பேருமாக சந்திச்சுக்கிட்டே இருந்தோம். மொதல்லே என்னைக் கோவமா மொறைச்சிப் பார்த்துக்கிட்டே இருந்தவ, என்னைப்பாத்து லேசாச் சிரிக்கவே ஆரம்பிச்சுட்டா. எம்மனசு என்னமோ சும்மா ரொங்கிடிச்சு.

ரொம்பநாளா இதை அவகிட்டே எப்படிச் சொல்றதுன்னு நெனைச்சிக்கிட்டே இருந்தேன். ஒருநாள் தைரியத்தை வரவெச்சுக்கிட்டுக் கேட்டே விட்டேன்.

"வீராயி! நாம் ரெண்டு பேரும் கண்ணாலம் கட்டிக்கிட்டா என்ன?"

"ஓம்மோவரைக் கட்டைக்கி அது ஒண்ணுதான் கொரைச்சல்! என்னைக்கட்டிக் கொண்டு போயி, நீ தாங்கிறீயே ஒட்டுத்திண்ணை அதிலேயா குடித்தனம்வைப்பே"ன்னு வெடுக்கென்று கேட்டாள்.

அவ குரலிலே கொஞ்சங்கூடக் கோவமில்லே. ஏதோ ரோசனை பண்ணிக்கிட்டுப் பேசுறவளாட்டந்தான் இருந்திச்சி.

நானும் ரொம்ப நாளா ரோசிச்சுப் பாத்துக்கிட்டே இருந்தேன், கடோசியா ஐயா கிட்டேக் கேட்டே வீட்டேன்.

ஒருநாள் ராத்திரி நல்லா நிலாக்காஞ்சுக் கிட்டிருந்திச்சு. ஐயா ராத்திரிச் சாப்பாட்டை முடிச்சிட்டு, வீட்டுக்கு வெளியிலே கட்டிலை எடுத்துப்போடச் சொல்லி உக்காந்து வெத்திலே போட ஆரம்பிச்சாரு. நான் போயி கட்டிலுக்குக் கீழே உக்காந்தேன்.

"என்னடா தூக்கம் வல்லியா?" என்னாரு.

"ஆமாங்கய்யா?"

கொஞ்சநேரம் உக்காந்து தைரியத்தை எல்லாம் வர வச்சிக்கிட்டு;

"ஐயா! நான் கண்ணாலம் கட்டிக்கப்போறேன் னுங்க" ன்னு சொன்னேன்.

ஐயா ஒண்ணும் பதில் சொல்லல்லே. கொஞ்சநேரத்துக்கப்புறம்.

"நம்ம மணியக்கார ஐயா வீட்டிலே இல்லிங்க வீராயி, அவ தானுங்க பொண்ணு".

கொஞ்ச நேரம் உக்கார்ந்து ரோசிச்சுக்கிட்டே இருந்தாரு.

"சரி...நீ போய்ப் படுத்துக்கடா" ன்னாரு.

அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை, நல்ல நாள் பார்த்து கணக்கப்பிள்ளை ஐயா வீட்டிலேருந்து, தேங்கா, பழம், பூ வெல்லாம்கொண்டு போய் மணியகாரர் வீட்டிலே வச்சு எனக்குப் பெண் கேட்டாக. அவுங்களும் சரின்னாக. அதுக் கடுத்த வாரம் வெள்ளிக்கிழமை கண்ணாலத்தை முடிக்கிறதாய் நிச்சயம் பண்ணிக்கிட்டாக.

அந்தவாரம் முழுவதும் ஊருலே இருந்தவுக எல்லாரும் என்னை விசாரிக்க ஆரம்பிச் சுட்டாங்க.

"என்ன பெரியமாடா, கண்ணாலங்கட்டிக்கப் போறியாமே...? ரெண்டுபேரும் எங்கே குடித்தனம் போறிய? கண்ணாலத்துக்கப்புறங் கூட ஓம்பெஞ்சாதி மணியகாரர் வீட்டிலேதான் வேலைக்கிப் போவாளா" இப்படியெல்லாம் கேட்டாக. எனக்கு என்ன பதில் சொல்றதின்னே புரியல்லே! அவளையாவது பாத்து ரோசனை கேக்கலாமுன்னா அந்தவாரம் முழுதும் அவளை கொளத்துப் பக்கம் காணவே முடியல்லை.

எனக்கும் ஒரே கொழப்பமாகத்தான் இருந்திச்சி, ஒண்ணுமே புரியல்லே. கண்ணாலத்துக்கின்னும் ரெண்டு நாள் தான் இருந்திச்சி. அன்னிக்கி ராத்திரி ஐயா வழக்கம் போல வந்து "சாப்பிட்டியாடா" ன்னு கேட்டாரு, "ஆமாங்க ஐயா" ன்னேன்.

"நாளைக்கிக் காலையிலே, வெள்ளனமா எந்திரிச்சுப் போயி, நம்ம கத்திரித்தோட்டத்துலே ஒரு பக்கமா, நல்ல எடமாப்பாத்து, மண்சுவர் எழுப்பி ஒரு குடிசை போட்டுக்கோ...கொத்தனாரையும் நாளைக்கிவரச் சொல்லிருக்கேன்"னாரு.

எனக்கு ஒண்ணும்சொல்லவே முடியல்லெ. வீட்டுக்குள்ளே போகப்போனவரு திரும்பி வந்தாரு.

"அந்தப்புளிய மரத்துப் புஞ்சைக் காடு ரெண்டு ஏக்கராவையும், கன்மாய்க்குப் பக்கத்துலே இருக்கிற நஞ்சை இரண்டு ஏக்கராவையும் இனிமே நீயே உழவடை பண்ணி எடுத்துக்கோ"ன்னு சொல்லிவிட்டு உள்ளே போகப் புறப்பட்டாரு.

நான் ஓடிப்போய் அவரு கால் இரண்டையும் கட்டிப் புடிச்சுக்கிட்டேன்.

"போய்ப்படுத்துக்கடா" ன்னு சொல்லிப்பிட்டு உள்ளே போயிட்டாரு.

வெள்ளிக்கிழமை அன்னிக்கி ஊர்ப்பிள்ளையாரு கோயில்லே கண்ணாலம் முடிஞ்சுது. ஊருலே இருந்தவுக எல்லாரும் வந்திருந்தாக மணியக்காரஐய்யா வீட்டிலேயிருந்து, தம் மகளுக்குக் கொடுக்கிறது போலே சீரெல்லாம் குடுத்தாக.

வீராயியை என் கத்திரித் தோட்டத்து வீட்டிலே கூட்டிப் போய்க் குடித்தனம் வச்சேன். கணக்கப்பிள்ளை ஐயா எனக்குத் தந்த நெலங்களைப் பத்திச் சொன்னேன். என்னை நிமிர்ந்து பாத்திட்டுக் கீழே குனிஞ்சுக்கிட்டா. அப்பப் பாக்கத்தான் அவ புதுப்பொண்ணாட்டமிருந்தா. அவ்வளவு வெக்கம்.

அந்த மகராசருக ஏத்தின விளக்குத்தான் சாமி...எனக்கும் பத்துப்பன்னிரண்டு புள்ளையும், குட்டியுமாகிப் பேரன் பேத்திகளையும் எடுத்திட்டேன்.

இப்பக்கூட என் ஆருதுல பொண்ணுக்குக் கண்ணாலம். அதுக்குத்தான் தூத்துக்குடிக்கிப் போயிக்கிட்டு இருக்கேன்" என்று

கூறிமுடித்தார். ரயில்வண்டியும் தூத்துக்குடியில் போய் நின்றது.

ரயில் நிலையத்தைவிட்டு நானும் அவரும் ஒன்றுகத்தான் இறங்கி வந்தோம், அந்த ஆளிடம் எனக்கு என்னவோ அசாதாரண மரியாதை ஏற்பட்டு விட்டது.

என் நண்பன் என்னை அழைத்துப்போகக்கார் கொண்டு வந்திருந்தான். காரோடு காத்திருந்த என் நண்பன் என்னை இன்முகங் காட்டி வரவேற்ருன். மற்றும் அவன் வேறு யாரையோ தேடுவதுபோல் தெரிந்தது. ரயிலை விட்டிறங்கிய ஜனங்களை அவன் கண்கள் ஊடுருவிக்கொண்டிருந்தன.

''யாரைத் தேடுகிருய்?'' என்று என் நண்பனைக் கேட்டேன்.

''பெண்ணின் தகப்பனர் இந்த வண்டியில் வருவதாய்த் தகவல் தந்திருந்தார். அவரைத்தான்தேடுகிறேன்'' என்ருன் கல்யாண மாப்பிள்ளையான நண்பன்.

''கல்யாணமாவதற்கு முந்தியே மாமனரை வரவேற்க வந்துவிட்டாயே! கல்யாணமானபின் மாமனரை தரையிலே நடக்கக் கூட விடமாட்டாய்போலிருக்கிறதே?'' என்று கிண்டலாய்ப்பேசினேன் நான்.

''புது சம்பந்தமாய் இருந்தால் நீ கிண்டல் செய்வதில் அர்த்தமுண்டு இப்போது எனக்கு மாமனராகப் போகிறவர் என் தாய் வழிமாமன். நம்மைப்போல் அவர் நவநாகரிக டிப்டாப் பேர்வழியல்ல. விவசாயத்தை நம்பிப் பிழைக்கிறவர். பழைய உறவை விடக்கூடாதென்றுஎன் பெற்றேர் அவர் பெண்ணைப் பேசி முடித்துவிட்டார்கள். நான் அவர்களை மீறி எந்தக் காரியத்தையும்செய்ததில்லை. ஆகையால் விவசாய குடும்ப சம்பந்தத்தை ஏற்கும்படியாய் விட்டது.........''

என்று கூறி மேலும் தொடர்ந்து பேசுமுன் ரயிலில் என்னேடு அளவளாவிப் பேசிக்கொண்டு வந்த ஒற்றைக்கை, கிழவன் சமீபத்தில் வந்துவிட்டார்.

''மாமா! உங்களைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன்'' என்று கூறி அவர்கையில் வைத்திருந்தப்பையை வாங்கினன் நண்பன். கிழவன் என்னைப்பார்த்து விழித்தார்; நான் அவரைப்பார்த்து விழித்தேன். எங்கள் இருவரையும் மாறி மாறிப்பார்த்தான் நண்பன்.

144853

சுதந்திர தின வாழ்த்துச் செய்தி !

எல்லாவித ஆர்ட் வேலைகளுக்கும்—மற்றும் லைன்—ஆப் டோன் கலர் பிளாக்குகளுக்கும்

★

—தயாரிக்குமிடம்—

R. K. S. STUDIO

137, பீட்டர்ஸ் ரோட்,

மதருஸ்-14.

Phone : 2438
Grams : MARIGOLD

விளம்பர விகிதம்

ராப்பர் 4-வது பக்கம் (இரண்டு கலர்)	100-0-0
,, ,, (ஒரு கலர்)	75-0-0
ராப்பர்உள் பக்கம்	75-0-0
சாதாரண முழு பக்கம்	60-0-0
,, ½ பக்கம்	30-0-0
,, ¼ பக்கம்	20-0-0

காண்டிராக்ட் விளம்பரங்களுக்கு,
அட்வர்டைஸ்மென்ட் மானேஜர்,

" தொழில் "
55, எடப்பாளையம் தெரு,
சென்னை-3.

KESAVA INDUSTRIES

(Prop. K. KESAVALU CHETTY)

★

OFFICE AT:

No. 102, Rasappa Chetty Street, Madras-3.

★

Manufacturers and Suppliers of :

POLISHED T. HINGES, STOVE BLACK PAINTED T. HINGES, NICKLE PLATED T. HINGES, ALDROPS—ALL DESIGNS PARLIAMENT HINGES —BUTT HINGES—HASPS & STAPLES ETC., ETC., ETC.,

'T' HINGES & ALDROPS

A SPECIALITY

★

Agents :

SRI MURUGA & CO.,

253/54, RASAPPA CHETTY STREET,

MADRAS-3.

பரதவரைப் பாரீர்!

—[ந. சிகாமணி]—

★

1. கட்டு மரமேறி—சீறிடும்
கடலலை தனைமீறி,
ஒட்டு மரமேறி—ஆடியே
ஒய்யார பண்பாடி,
ஒற்றைத் துடுப்பெடுத்து—கடற்கரை
ஓரம் தனைவிடுத்து,
போகின்றார் பாரீர்—பரதவர்
பாடும் பண்கேளீர்!

2. ஒட்டிய உடலோடு—இறுகக்
கட்டிய உடையோடு,
அட்டிய உணவோடு—அழகாய்
வெட்டிய தடியோடு,
வெட்டிட வாளோடு—மீனைக்
கட்டிட கயிற்றோடு,
போகின்றார் பாரீர்—பரதவர்
பாடும் பண்கேளீர்!

3. சட்டிக் குழம்போடு—அலையை
சாடிடும் வலையோடு,
மட்டில் ஒளிவீச—நல்ல
மறைவில் விளக்கோடு,
கொட்டிக் கிழங்கோடு—மணிலா
கொட்டை பையோடு,
போகின்றார் பாரீர்—பரதவர்
பொழியும் பண்கேளீர்!

லக்ஷிமி பிராண்டு

★

ஸ்டீல் டிரங்க் ஒர்க்ஸ்

திருச்சி-2.

Prop. T. P. வேலுப் பிள்ளை.

குறிப்பு:—கேஷ் பாக்ஸ், ஆபீஸ் தபால் பாக்ஸ்,

கம்பைனேடிரே, ஜுவல் கேஸ்

இவைகள் உயர்ந்த முறை ஸ்டீலில் கிடைக்கும்.

நிறுத்தல், முகத்தல், நீட்டல் அளவைகளுக்கு மெட்ரிக் முறை

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சேர், மணங்கு ஆகியவை பொதுவாக உபயோகத்திலிருந்து வந்தபோதிலும், சேரின் எடையானது 24 தோலாவிலிருந்து 112 தோலா வரை வேறுபட்டதாயிருக்கிறது. நமது நாட்டில் 150-க்கு மேற்பட்ட வெவ்வேறு வகையான எடைகளும், நீட்டலளவைகளும் உபயோகத்திலிருந்து வருகின்றன. அனேக விஷயங்களில், ஒரே ஜில்லாவுக்குள்ளேயேகூட சேர் அல்லது சாதாரண எடை, அல்லது படி பல்வேறு அளவுகளைக் குறிப்பிடுகிறது. இதுபோல், உணவுத் தானியங்களை அளப்பதற்கு ஒரு வகையான சேரும், பாலை அளப்பதற்கு மற்றொரு வகையான சேரும், இதர பொருள்கள் விஷயத்தில் வெவ்வேறு வகையான அளவுகளும் இருந்து வருகின்றன.

> வரும் அக்டோபர் முதல், சோதனை முறையாக தமிழ்நாட்டின் வடக்கு மாவட்டங்களில் மெட்ரிக் நீட்டல் நிறுத்தல் முகத்தல் அளவைகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட இருக்கின்றன. மெட்ரிக் முறையை கொண்டுவருவதை ஒத்திப்போடுமாறும் அல்லது மொத்த பேரங்கள் சம்பந்தமாக மட்டும் கடைப்பிடிக்குமாறும், பொது மக்களுக்கு கஷ்டம் கூடாதென்றும் "தொழில்" சென்ற இதழில் தலையங்கம் எழுதியது. இங்கு பிரசுரிக்கப்படும் கட்டுரை மொத்த பேரங்கள் சம்பந்தமாக மட்டிலுமே தற்போது மெட்ரிக் முறை நடைமுறைக்கு வரும் என்று விளக்குகிறது. அரசாங்கம் அனுப்பியுள்ள இக்கட்டுரையில் மெட்ரிக் முறையின் அவசியம், சௌகர்யம் முதலியன பற்றி கூறப்பட்டுள்ளது. ஆ-ர்.

குழப்ப நிலைக்குப் பரிகாரம்

இத்தகையதொரு குழப்ப நிலைக்குப் பரிகாரம் காணுவதற்காகத்தான், திட்டக் கமிஷன் 1955-ல் இப்பிரச்னை பற்றிய ஆராய்ச்சியொன்றை மேற்கொண்டது. அது பற்றி விவாதங்களும் பரிசீலனைகளும் நடத்தப்பட்டன. முடிவாக மெட்ரிக் முறையே சிறந்ததென்று முடிவுக்கு வரப்பட்டது.

மெட்ரிக் முறையானது அடிப்படையில் ஒரு தசாம்ச முறையேயாகும்; அதில் எடை அல்லது படியின் பிரிவுகள் பத்துப் பத்தாகப் பெருக்கமாகிக் கொண்டே போகும். அதாவது, 10 கிராம்கள் கொண்டது ஒரு டெக்கா கிராம்; 10 டெக்கா கிராம் கொண்டது ஒரு ஹெக்டோ கிராம்; 10 ஹெக்டோ கிராம் கொண்டது ஒரு கிலோ கிராம். இது போலவே, 10 மில்லிமீட்டர் கொண்டது ஒரு சென்டி மீட்டர்; 10 சென்டி மீட்டர் கொண்டது ஒரு டெஸிமீட்டர், 10 டெஸிமீட்டர் கொண்டது ஒரு மீட்டர்.

நமது பாரம்பர்யச் சொத்து

மெட்ரிக் எடை, படி முறை அடிப்படையாகக் கொண்டுள்ள தசாம்ச முறையானது, 2,000 வருஷங்களுக்கு முன் ஒரு இந்திய கணித மேதை "0" வின் (பூஜ்யத்தின்) மதிப்பைக் கண்டுபிடித்து, இப்போது சர்வதேச ரீதியில் பழக்கத்திலிருக்கிற எண்ணிக்கை முறையை உருவாக்கிக் கொடுத்தார். எனவே, மெட்ரிக் முறையைப் பின்பற்றுவது விஷயத்தில், இந்தியா தனது சொந்தப் பாரம்பர்ய ஏற்பாட்டுக்கே திரும்புகிறது என்று கூறலாம்.

படிப்படியாக மாறுதல்

ராஜ்ய சர்க்கார்கள், தொழில்களின் பிரதிநிதிகள், இது விஷயத்தில் அக்கறையுள்ள மற்றவர்கள் ஆகியோருடன் பல



முறை கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே, பல்வேறு ராஜ்யங்களிலும் குறிப்பிட்ட பிரதேசங்களில் 1958 அக்டோபர் 1-ந் தேதி முதல் வர்த்தகத்துறையில் மெட்ரிக் எடைகளை உபயோகத்துக்குக் கொண்டு வருவதன் மூலம் மெட்ரிக் முறை ஆரம்பித்து வைக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதே தினத்தில் மெட்ரிக் முறை பருத்தி ஜவுளிகள். இரும்பு-உருக்கு, எஞ்சினீயரிங், கன ரக ரசாயனங்கள், சிமிட்டி, உப்பு, காகிதம், காப்பி ஆகியவை போன்ற பெரிய தொழில்களிலும் அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

இந்த மாறுதல் சுலபமான முறையில் ஏற்படும்படி செய்வதற்காக. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்கள், தொழில்கள் ஆகியவைகளில்கூட, ஏற்கெனவே உபயோகத்தில் இருந்து வருகிற எடைகள் மேலும் இரண்டு வருஷகாலத்துக்கு, அ.தாவது 1960 செப்டெம்பர் 30-ந் தேதி வரையில் உபயோகத்திலிருந்து வருவதற்கு அனுமதிக்கப்படும், அதாவது பிரஸ்தாப இரண்டு வருஷ காலத்தில் மெட்ரிக் முறையும் ஸ்தல எடை, படி முறைகளும் சேர்ந்தாற்போல் உபயோகத்திலிருந்துவரும்; இதன் மூலம் மக்கள் புதிய முறையில் பரிச்சயம் கொள்வ

தற்கு சந்தர்ப்பம் ஏற்படும். இந்த இரண்டு வருஷ கால இறுதியில் குறிப்பிட்ட பிரதேசங்களில் பழைய முறைக்குப் பதிலாக புதிய எடைகள் பூரணமாய் அமுலுக்கு வரும்,

1966 இறுதியில் நாடு முழுவதும் பூரணமாக மெட்ரிக் முறைக்கு மாறிவிடும்.

அக்டோபர் 1-ந் தேதியிலிருந்து, தெரிந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் கடைக்காரர்கள் உணவுத் தானியங்கள், மளிகைச் சாமான்கள், காய்கறிகள், நிலக்கரி முதலியவைகளை, சேர் அல்லது ஏற்கெனவே பழக்கத்திலிருந்து வருகிற எந்த எடைக்கும் பதிலாக கிலோ கிராம் எடைப் பிரகாரம் விற்பனை செய்யலாம். துணியின் சில்லறை விற்பனை போன்ற நீட்டலளவு விவகாரங்கள் தற்போதிருந்து வருகிற கஜம் போன்ற அளவுகளிலேயே தொடர்ந்து நடத்தப்பட்டுவரும். உணவுத் தானியங்கள் படிக் கணக்கில் விற்பனை செய்யப்பட்டு வருகிற சென்னை, கேரளா ஆகிய ராஜ்யங்களில், தற்போதிருந்து வருகிற படி அளவு முறை உபயோகம் பாதிக்கப்படமாட்டாது.

தசாம்ச நாணய முறை ஒரு வழிகாட்டியாகும்

தசாம்ச நாணய முறையானது 1957 ஏப்ரல் 1-ந் தேதியன்று அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது, மக்களில் பெரும் பகுதியினர் இப்போது தாசாம்ச நாணய முறையில் ஓரளவுக்கு நன்கு பரிச்சயமாகிவிட்டனர். சிலர் இப்புதிய முறையில் மிகவும் கை தேர்ந்தவர்களாகிவிட்டனர், அதாவது தாங்கள் பிறருக்குச் சில்லறை கொடுக்கும் போதெல்லாம் ஒரு நயா பைஸா அல்லது இரண்டு நயே பைஸே தங்களுக்கு லாபமாகவே இருக்கும்படி கணக்காக்கிக் கொடுத்து வருகின்றனர்.

மெட்ரிக் எடை, படி முறையை அமுலுக்குக் கொண்டு வருவதால், ஆரம்பத்தில் சில கஷ்டங்கள் ஏற்பட நேரிட்டாலுங்கூட, மாறுதல் காலம் முடிவடைந்து மக்கள் புதிய முறைக்கு நன்கு பழக்கமாகிவிடும்போது, இப்புதிய முறை மக்களெல்லாராலும் விரும்பப்படும் என்பதில் சந்தேகமில்லை.

பெரிய தொழில் துறைகளில் அக்டோபர் 1-ந் தேதி முதல் மூலப் பொருள்கள் கொள்முதல், தயாரிப்புப் பொருள்கள் விற்பனை ஆகிய விஷயங்களில் மெட்ரிக் அளவு முறை அமுலுக்கு வரும். விற்பனை, கொள்முதல் ஆகிய எல்லா விஷயங்களிலும் விலைகளும் அளவுகளும் மெட்ரிக் முறைப்படியே குறிப்பிடப்படும்.

ஜூலை 1-ந் தேதி வர்த்தகம் ஆரம்பமாகியுள்ள சணல் தொழிலின் சௌகரியத்தை முன்னிட்டு, அதில், இந்த மாறுதல் மூன்று மாதங்களுக்கு முன்கூட்டியே அமுலுக்கு வந்துவிட்டது. வேறுவிதமாகச் சொன்னால், புதிய மெட்ரிக் முறையானது சணல் தொழிலில் ஆலைகளின் மொத்த வர்த்தகம் விஷயத்தில் ஏற்கனவே அமுலில் இருந்து வருகிறது.

சர்க்கார் இலாகாக்களும் ஸ்தாபனங்களும் பல கட்டங்களில் இப்புதிய முறைக்கு மாறியாக வேண்டும். அக்டோபர் 1-ந் தேதி முதல் சர்க்கார் இலாகாக்களும் ஸ்தாபனங்களும் ஸ்டோரில் சாமான்களின் கொள்முதல் சப்ளை ஆகிய விஷயங்களில் மெட்ரிக் முறையை உபயோகித்து வரும். இன்டெண்டுகளிலும் டெண்டர்களிலும் அளவுகள், விலைகள் ஆகியவை மெட்ரிக் முறைப்படி குறிப்பிடப்படும்.

நிலம், சுரங்கம் ஆகியவை சம்பந்தமான புதிய சர்வேக்கள் மெட்ரிக் அளவுப்படி அமைந்திருக்கும்; ஆனால், ஏற்கெனவே இருந்து வருகிற ''மாப்'' படங்கள் தொடர்ந்து உபயோகப்படுத்தப்பட்டு வரும்; அளவு மாற்ற அட்டவணை அப்படங்களில் வரையப்பட்டிருக்கும். சர்க்கார் இலாகாக்களால் சேகரிக்கப்பட்டு, பிரசுரிக்கப்படுகிற தொழில் நுட்ப, புள்ளிவிவர, விஞ்ஞான, விற்பனைத் தகவல்களும் மெட்ரிக் அளவுகளில் தான் குறிப்பிடப்படும்.

முன்வேற்பாடுகள்

புதிய முறையை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான முன்னேற்பாடுகளை மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் மேற்கொண்டுள்ளன. எடைகள், படிகள் ஆகியவைகளை உற்பத்தி செய்வதற்கான தயாரிப்புச் சக்தி பற்றி சர்வே ஒன்று நடத்தப்பட்டிருக்கிறது. புதிய எடைகளையும் படிகளையும் தயாரிபபதில் கஷ்டமெதுவும் இருக்காது என்று அந்த சர்வேயிலிருந்து தெரியவந்திருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பாளர்களுக்கு ராஜ்ய சர்க்கார்கள் லைசென்ஸ் வழங்குவார்கள். எடைபோடும் யந்திரங்கள் மெட்ரிக் அளவுப்படி மாற்றியமைக்கப்படும்,

மெட்ரிக் எடைகள், படிகள் ஆகியவைகளை அமுல் நடத்துவதற்கான சட்ட திட்டங்களை ராஜ்ய சர்க்கார்கள் இயற்றியுள்ளனர் அல்லது இயற்றி வருகின்றனர். இது ராஜ்ய சர்க்கார் அதிகார விஷயமான படியால் இவ்வாறு செய்யப்படுகிறது. எடை, படிகள் அமுல் நடவடிக்கை இலாகாக்கள் ஏற்கெனவே இருந்து வருகிற ராஜ்யங்களில் அவை மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. அத்தகைய இலாகாக்கள் இல்லாத ராஜ்யங்களில் அவை புதிதாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கான சிப்பந்திகளுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

புதிய எடைகள், படிகள் ஆகியவைகளில் மக்களுக்குப் பரிச்சயம் ஏற்படும்படி செய்வதற்காக, பிரசார இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மெட்ரிக் முறைக்கு மாறவேண்டும் என்று இந்தியா முடிவு செய்திருப்பதாவது உலகமெங்கிலும் ஒரு அக்கறையைத் தூண்டிவிட்டிருக்கிறது.

இதுவரை மெட்ரிக் முறையை அமுலுக்குக் கொண்டு வந்திராத பிரிட்டன், அமெரிக்கா ஆகிய இரு பெரிய நாடுகளிலும் இந்தியா மெட்ரிக் முறையைப் பின்பற்றும் போது நாங்களும் ஏன் அவ்வாறு செய்யக் கூடாது என்ற கேள்வி எழுந்திருக்கிறது. சென்ற 100 வருஷ காலத்தில் மொத்தம் 58 நாடுகள் மெட்ரிக் முறைக்கு மாறியிருக்கின்றன. இந்த முறைக்கு மாறியிருப்பது குறித்து அந்த நாடுகள் சிறிதும் வருந்தியதே கிடையாது. இவைகளில் அனேக நாடுகள், ஒரே ரீதியாக அமைந்திருந்த தங்களுடைய உள்நாட்டு முறைகளைப்புறக்கணித்து விட்டு மெட்ரிக் முறைக்கு மாறியுள்ளன. ஆசியாவிலுள்ள அனேக அண்டை நாடுகளும் இந்த முறையைப் பின்பற்றுகின்றன.

ஒன்றுபடுத்தும் சக்தி

காலப்போக்கில் மெட்ரிக் முறையாவது இந்திய மக்களின் மனதுக்குகந்த முறையாக ஆகிவிடும் என்பதில் சந்தேகமேயில்லை. எல்லா வகுப்பு மக்களுக்கும், குறிப்பாய் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வாசிக்கும் நம் இளைஞர்களுக்கு நேரமும் முயற்சியும் எவ்வளவோ மிச்சமாகும்.

தொழிலாளரும் துயரமும்

[அரசன்]

தொழிலைப்பற்றியும், தொழிலாளர்களைப் பற்றியும், கருத்தோடும், கவலையோடும் பணியாற்றிவரும் "தொழில்" பத்திரிகையில்,—அதுவும் குறிப்பாக சுதந்திரமலரில்,- தொழிலாளர்களைப்பற்றி சில வார்த்தைகளை எழுதுதல் மிகப்பொருத்தமாகும்.

இன்றைய தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் உள்ள உறவினை உற்று நோக்குங்கால் நாட்டின் எதிர்காலம் எவ்வளவு இருள் சூழ்ந்து விடும் என்பதை எண்ணும் போது நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட எவர். மனந்தான் துன்புறாது?

தொழிலாள்ர்களின் தலைவராக விளங்கக் கூடிய அத்துணை பேரும் இன்று தொழிலாளர்களைப் பணயமாக வைத்து தங்கள் கட்சி சூதாட்டத்தில் ஜெயிக்க விரும்புகின்றனரே யன்றி உண்மையாகத் தொழிலாளர்களின் துயரைத் துடைப்பவர்களாக இல்லை. தங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டிகள், துயர் துடைத்து வாழ்க்கை நிலையை உயரச் செய்யும் உத்தமர்கள் என்று எண்ணிக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து தன் வர்ழ்க்கைக்கு வேண்டியவற்றிற்கு அதிகமான வசதிகளை ஏற்படுத்திக் கொண்டும் வருகிற கயவர் கூட்டம் நாட்டில் நர்ளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருவது தொழிலுக்கும் சரி, நாட்டிற்கும் சரி நாச காலத்தை நிச்சயம் கொண்டு வந்து விடும். நாசத்திற்குப் பின் ஒருக்கால் நல்ல நிலை ஏற்பட்டு தொழிலியக்கத்தில் புத்துணர்வு ஏற்பட்டாலும் ஏற்படலாம். அது வேறு விஷயம். இன்றைய நிலையில் தொழிலாளர்களுக்கு உரிமையைப் பற்றி மட்டுமே எடுத்துச் சொல்லப் படுகிறதேயொழிய அவர்களுடைய கடமை என்ன என்பதை எந்த தொழிலியக்கத் தலைவர்களும் எடுத்து சொல்லுவதாகக் காணோம். உரிமையையும், கடமையையும் ஒருங்கே உணரக் கூடிய நிலையில் தான் தொழிலர்ளர்கள் மிகக்கட்டுப் பாடாக வளர முடியும்; வாழ முடியும். தொழிலாளர்கட்கு இருக்கக் கூடிய மிகக் கூரிய வாள், வேலை நிறுத்தமாகும், இவ்வாளினை எடுத்துப் போர் புரியும் உரிமையை மட்டும் அவர்களுக்கு உணர்த்தபடுகின்றதேயொழிய, எடுத்துப் போர் செய்யவல்லதகுதியினை யாரும் அளிப்பதில்லை. அதற்கு மாறாக அவ்வாளினையே மாற்றானிடம் அடகு வைத்து விட்டு வாழ்கின்ற தொழிலுலகையும் இன்று நாம் காண்கின்றோம். கண்ணை விற்று சித்திரம் வாங்குகின்ற இவர்கள் கதையினைக் கேட்டு எவர் தான் சிரிக்கமாட்டார்கள்? இந்நிலை மிகமிகமோசமானது. இன்று உள்ள தொழிற்சங்கங்கள் தொழிலுறவை எளிதாக்குவதற்கு பதிலாக அவ்வுறவைக் கெடுக்கும் வகையில் தொழிலாளர்களுக்கு உணர்ச்சிகளையூட்டி வருதல் மிகமிக வருந்தத்தக்கச் செய்தியாகும். தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களின் பிரச்சினைகளை அணுகும் போதும், அது பற்றி தொழிலதிபர்களுடன் வாதிடும் போதும் தொழில் சம்பந்தமான நுணுக்கங்களையோ, அல்லது அவ்வப்போது மாறிவரும் நிலைகளுக்கேற்ப திருத்தப்படும் சட்டங்களையோ அறிந்து தொழிலாளர்களின் பிரச்சினைகளை அணுகுவதாகக் காணோம். தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் திறமையைப் பெருக்கும் வகையில் தொழிற்-கல்வி நிலையங்களாகவும் விளங்க வேண்டும். இந்நிலையங்களில் தொழிலாளர்களின் உரிமையோடு கடமையையும் கட்டுப்பாட்டையும், தொழில் வளர்ச்சி திறமையையும் போதிக்க வேண்டும். இல்லையேல் இத்தொழிற் சங்கங்கள் அனைத்தும் வெறும் போர் முழக்க பாசறைகளாக மட்டும் விளங்குமே யல்லாது, பயனுற்ற தொழிற்சங்கங்களாக விளங்காது.

நிற்க தொழிலதிபர்களுடைய மனப்போக்கை பார்க்குங்கால் மாறிவரும் காலத்திற்கேற்ப, தங்களைமாற்றிக் கொண்டவர்களாகக் காணோம். இந்நிலை தனிப்பட்ட தொழிலதிபர்களிடத்தில் இன்னும் இருப்பதைக் கண்டு நாம் வியப்பதற்கில்லை. ஆனால் பொதுத்துறையில் பங்கு கொண்டுள்ள அதிபர்களிடத்தும், அரசாங்கத்தினிடமும் காணும்போது தான் நமக்கு மன வேதனை ஏற்படுகிறது. நாட்டின் எதிர்காலம் நல்லதொரு சூழ்நிலையை நாடி முன்னேற வேண்டுமானால் தனியொருவனுக்கு உணவில்லை என்ற நிலை மாறிட

வேண்டுமானால், எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டுமானால், உழைப்புக்கேற்ற ஊதியம், இலாபத்திற்கேற்ற பங்கு என்ற இருகொள்கைகளையும் தடங்கலின்றி ஏற்று தொழில் நடத்த முன்வரவேண்டும். வீணில் உண்டுகளித்து கொழுத்திடும் தொழிலதிபர்கள் தங்களுக்கு வரும் இலாபத்தை எவ்வாறுசெலவழிப்பது என்றுகூட அறியாது ஆடம்பர வாழ்க்கையும், அகங்காரமும் கொண்டு இவர்கள் யார் பங்குகேட்க? என்று சொல்லிடும் நிலையுள்ளவரை தொழில் உலகில் நல்லுறவு நிலவ முடியாது. இலாபத்தில் பங்கில்லை. என்ற நிலையுள்ளவரை தொழில் திறன் வளர முடியாது. உற்பத்தி அதிகமாகாது. நாடு சுய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. சுதந்திரம் வெறும் பேச்சாகவே இருக்கமுடியும், தொழிலாளர் தொழிலதிபர் நல்லுறவு ஏற்படவேண்டுமானால் உழைப்புக்கேற்ற ஊதியம், இலாபத்திற்கேற்ற பங்கு உரிமையோடு கடமையையும் மேற்கொள்ளல் என்கிற சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்டு இருசாராரும் நடந்துகொள்வார்களேயானால் நாட்டுக்கும் அது நல்லது. தொழிலும் வளரும் இலாபமும் பெருக முடியும், தொழிலாளரும் உயரமுடியும். மேற்சொன்னவற்றை அடிப்படையாகக்கொண்டு ஏற்படும் தொழிற்தகராறுகள் எதுவானாலும் எளிதில் முடிவுகாண முடியும். தொழிலுறவும் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கும்.

●

சென்னை மாவட்ட மருத்துவர் சங்கம்

29-7-58 மாலை 2 மணிக்கு ஆனைகெவுணி 32 சந்திரப்ப முதலி தெருவில் திரு. P. ஈஸ்வர மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

ஆரம்பத்தில் திரு. P. K. கோவிந்தசாமியின் நாதஸ்வரம் நடைபெற்றது. N. சொக்கலிங்கத்தின் இறைவணக்கத்திற்குப் பிறகு தேர்தல் ஆரம்பமாகியது.

தலைவர் P. ஈஸ்வரமூர்த்தி குறித்தநேரத்தில் வந்து நியமனப்பத்திரம் முதலியவைகளைப் பரிசீலித்து மருத்துவர்கள் முன்னேற வேண்டிய பல அரிய கருத்துக்களை தம் இனிய சொற்பொழிவின் மூலம் விளக்கினார்.

பிறகு கீழ்க்கண்ட நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தலைவர் N. R. கோபால், போஷகர் நாகஸ்வர சக்கரவர்த்தி, P. S. நடேசனார். துணைத்தலைவர்கள்:

C. கதிர்வேல், K. S. நாராயணசாமி, M. வரதன். பொதுச் செயலாளர் K. S. ஏழுமலை. துணைச்செயலாளர்கள் P. N. கோவிந்தசாமி, V. N. கண்ணன் பொருள் காப்பாளர்: M. G. கணேசன், கணக்குப்பரிசோதகர் P. ஐம்புலிங்கம், விளம்பரதாரர் A. S. மணி.

செயற்குழுவினர்

P. R. நடேசன், R. இராஜகோபால் P. இராமசாமி E. பார்த்தசாரதி, P. M. இராமசாமி, P. G. அங்கமுத்து, M. M. தேவராஜன் M. G. கணேசன, T. N. துரைக்கண்ணு, துரை, V. T. காளிரத்தினம், R. சுந்தரம், P. G. பார்த்தசாரதி.

பின் மருத்துவர்பால் பேரன்பு கொண்ட சென்னை நகராட்சி மன்ற ஆல்டர்மேன் திரு. பெருமாள் உடையார் அவர்கள் எல்லாச் சமூகங்களுக்கும் அரசாங்கம் சலுகைகள் காட்டுகிறது. நீங்களும் ஒற்றுமையாய் இருந்து பாடுபட்டு கிடைக்கவிருக்கும் சலுகைகளைப் பெற்று முன்னேற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

K. M. முத்து ஆக்க வேலை செய்ய வேண்டிய அமைப்பு முறைகளை தெள்ளத் தெளிய விளக்கினார்.

P. ஐம்புலிங்கம் K. N. சுந்தரம் ஆகியோர் சங்க முன்னேற்றத்திற்காக ஒவ்வொருவரும் தீவிரமாக உழைக்க வேண்டுமென்று கேட்டுகொண்டார்கள்.

P. S. நடேசனார் பேசுகையில் அரசாங்கம் கலை அபிவிருத்திக்கு அளிக்கும் சலுகைகளை அடைய தாம் முன்னின்று போராட சித்தமாக இருப்பதாகக் கூறினார்.

K. N. நடராஜன் தம் போன்ற இளைஞர்கள் சங்க முன்னேற்றங்கருதி பாடுபட தயாராய் இருப்பதாய்ப் பேசினார்.

அவ்வமயம் P. N. கோவிந்தசாமிக்கு 'நாதஸ்வர இசையரசு, என்ற பட்டமளிக்கப்பட்டது.

முடிவில் செயலாளர் K. S. ஏழுமலை வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

சிந்தனைக் கருவூலம் சுந்தரம்

[சோ. கருணாநிதி]

"எழுதப் பிறந்தவர்கள் நாங்கள் தாம்" என்று கூறிக் கொண்டிருந்தவர்கள் புகழ் மாடத்தின் இடத்தையெல்லாம் அடைத்துக் கொண்டிருந்தனர். "அந்தக் காலத்தில்" எழுத்தையே தொழிலாகக்கொண்டு வாழ்ந்தவர்கள் புதிதாகத் தோன்றும் இளம் எழுத்தாளர்களை வரவேற்க எளிதில் முன்வரமாட்டார்கள் என்பது உண்மைதான். ஆனால் கலையரசி தன் பழைய மக்களின் தொண்டுகள் பலவாறாயினும் அவற்றால் மட்டும் மன நிறைவு பெறமாட்டாள் என்பதும் உண்மை. திரு. எஸ். டி. சுந்தரம் அவர்கள் எழுத்துலகில் நுழைந்தபோது அந்த ராஜ்யத்தின் பழைய மன்னர்கள் ஓய்வெடுத்துக்கொள்ளப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். மக்களின் புறக்கணிப்பைத் தாங்காது ஓடிக் கொண்டிருந்தனர். அல்லது முன்னர் இருந்த ஆட்சி அமைப்பையே தகர்த்தெறிந்து முன்னேற மக்கள் துடித்ததும் காரணமாக இருக்கலாம். எழுத்துலக மன்னர்கள் இனியும் ஆதரவாளரையே (patron) நம்பிவாழ முடியாது என உணர வேண்டிய பருவம் வந்தது. வீட்டிலேயே இருந்து பட்டினியால் வாடினும் அது ஒரு பொருட்டில்லை; எழுத்தாளனின் மானம் பெரிது எனும் நல்லுணர்ச்சி வளரத்தக்க சூழ்நிலை உருவாகிக்கொண்டிருந்தது. எழுத்தின் பழம் மரபுகள், வீண் ஆரவாரம் போன்றவற்றை நீக்கி புதிய விழிப்புணர்ச்சி மேலோங்க வேண்டிய இன்றியமையாமை எழுந்தது. அத்தகைய நிலையினை விரைவு படுத்த ஓடி வந்த இளைஞர்கள் பலர்: அவர்களுள் போதிய மன வளமும் அறிவாழமும் நிரம்பியவர் சிலர்; அந்தச் சிலருள்ளும் முற்றிலும் உணர்ச்சிக்கு ஆட்படாது அறிவு வழியில் நடைபோட முன்வந்த

வருள் திரு. சுந்தரம் முதன்மையாளர்.

எளிமையில் பெருவிருப்பம் உடையவர். ஆயினும் அவருடைய உள்ளம் விரிந்தது; வளம் மிக்கது. திரு. சுந்தரம் தாம் எழுதியபடியே வாழ்பவர். இயல்பாகவே உரிமையுணர்ச்சி மேலோங்க வாழ்ந்தவர். திருவையாறு அரசர் கல்லூரியில் பயின்ற காலத்திலேயே நாட்டின் விடுதலைப் போரில் துணிச்சலுடன் ஈடுபட்டார். ஆங்கிலப்பேரறிஞன் பைரன் படைப்புக்களில் நாம் காணும் நாட்டுப் பற்றும் உரிமை வேட்கையும் திரு. சுந்தரம் அவர்களிடம் மாணவப் பருவத்திலேயே பொங்கி வழிந்தன. பைரன் தன் நாட்டை விட்டு வெளியேறி தான் கண்ட பல நாடுகளின் உரிமைப் போராட்டங்களை ஊக்குவித்துப் பாடிய பாடல்கள் பலவுண்டு, "சில்லான்" எனும் கொடிய சிறைக் கூடத்தில் அடைபட்டுக் கொடுந்துன்பப்பட்ட வீரன் ஒருவனின் நிலையைப்பற்றி பைரன்பாடிய பாடல்கள் மிகவும் புகழ்பெற்றவை. திரு சுந்தரம் நாட்டு விடுதலைக்காகக் சிறையில் துன்பப் பட்டிருக்கிறார். ஆனால் இந்தக் கவிஞரைப் பாராட்டிப் பாட ஒரு பைரன் இல்லை.

கலைஞனின் கனவு!

சிறையில் வாழ்ந்தபோது அவர்கண்டது தான் "கவியின் கனவு" என்ற ஒப்பற்ற நாடகம். அதில் நிகழ்ச்சிகளின் சித்திரங்களை விட இலக்கிய நயமும் அழகும் நம் கவனத்தை மிகுதியும் கவர்வனவாம். அதில் வருபவர்கள் யாவரும் ஆழ்ந்த சிந்தனையின் மறக்க முடியாத படைப்புக்கள். ராஜகுருவின் செயல் மூலம் ஆசிரியர் தரும் செய்தி நம் சிந்தனையைக் கிளர்கிறது. அடுத்து எழுந்தது 'மனிதனும் மிருகமும்', அதில் பண்பட்ட ஆசிரியர் ஒருவரின் வேட்கை மிகுந்த படைப்பினை நம்மால் காண

144 853.

முடிந்தது. மனிதத் தன்மையே 'சவா'லுக்கு ஆளாகி விட்ட இந்த நாட்களில் எழுத்தாளனின் துணிவு மிக்க ஒரு முயற்சியாக அது சிறந்தது. மக்களின் பல்வேறுபட்ட உணர்ச்சிகளை அவர் நுணுக்கமாக ஆராய்ந்தறிந்திருக்கிறார். விருப்புவெறுப்புகளையும் வேடிக்கையானதும் விபரீதமானதுமான ஆசைகளையும் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார். 'சுவை' என்பதும் 'நயம்' என்பதும் சொற்செட்டிலும், தேர்விலும் தான் இருக்கின்றன என்பதையும், வார்த்தைப் பந்தல்களும், சொற்சிலம்பு வீச்சுகளும் இலக்கிய வளர்ச்சிக்கு எப்பொழுதும் துணை செய்வதில்லை என்பதையும் திரு. சுந்தரம் அவர்களின் எழுதுகோல் அறியும்.

திரு. ரா. கிருஷ்ணமூர்த்தியின் "கள்வனின் காதலி" படமாக்கப் பட்ட பொழுது திரைக்கேற்றபடி அதை அமைக்கும் பொறுப்பு இவரிடம் தரப்பட்டது. அந்தப் பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றினார். முத்தையனின் மன வேறுபாடுகளும் கல்யாணியின் அவல நாடகமும் நம் நினைவில் என்றும் இருக்கும். சொல்லப்போனால் அவை மூலத்தில் இருந்ததைவிட தெளிவும் அழகும் பெற்று விளங்கின. அதே போன்று எத்தனையோ படக்கதைகளுக்கு அவருடைய எழுத்தாற்றல் பயன்பட்டது.

சமதர்ம சீலர்

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது அவருடைய இதயத்தில் கொழுந்துவிட்டு பிரகாசித்துக் கொண்டிருந்த விடுதலை உணர்ச்சியின் கனிந்த நிலைதான் அவரை ஓர் சோஷலிஸ்டாக மாற்றியது. எனவே தான் அவருடைய எழுத்துக்களில் சமதர்ம சிந்தனையின் அடிப்படையையும் அணுகு முறையையும் பரக்கக் காணலாம். வேகமும் உணர்ச்சியும் மிகுதியாயினும் நடுவுநிலை தவறாத வழி அவருடையது. அவருடைய பாத்திரப் படைப்புகள் பெரும்பாலும் 'விரக்தி' அடைந்தநிலையிலேயே அமைந்திருக்கின்றன. வாழ்க்கையின் சுவையற்ற, மகிழ்ச்சி நீங்கிய இருண்ட பகுதிதான் அவருக்கு முதலில் தெரிவது போலத் தென்படுகின்றது. இது உண்மையாயின் இந்த நிலை தவிர்க்க முடியாத ஒன்று. பெர்னாட்ஷாவின் நாடகங்களில் கூட இந்த அம்சங்கள் பெருமளவு காணப்படுகின்றன. திரு. சுந்தரம் அவர்களின் படைப்புகளில் தாமஸ் ஹார்டி, டெஸ், எஸ்டுஹிபா முதலியவர்கள் தம் சாயலைப் பதித்துச் செல்கின்றனர். அவர்கள் எல்லாம் கிடைக்காத ஒன்றிற்காக ஏங்குபவர்கள். ஒருவகைப்பட்ட இனிய, பேராசைக் கனவு காண்பவர்கள். நம்முடைய அனுதாபத்தை எளிதில் பெறுபவர்கள். நாம் அன்றாட வாழ்க்கையில் எதிர்ப்படும் எத்தனையோ பேர்களுடைய மனப்போராட்டங்களின் அழகியமறக்க முடியாத பதிப்புகள். அவர்கள் விடும் பெருமூச்சுகள் நம் நெஞ்சில் அலைகளையே எழுப்பும் திறனுடையவை.

உண்மை நிலைக்கண்ணோட்டம் படைத்த திரு. சுந்தரத்தின் செய்யுட்படைப்புகள் காலத்திற்கும் புதுமை காட்டும் வண்ணம் அமைந்திருக்கின்றன. உரையாடல்களை அமைப்பதில் 'கால்ஸ் வொர்த்து'வையும் மிஞ்சுகிறார். பாத்திரங்களை அறிமுகப் படுத்துவதில் பல இடங்களில் 'இப்ஸனையும் சில இடங்களில் 'டிரைடனையும் நினைவு படுத்துகிறார்.

திரு. சுந்தரம் அவர்கள் வெறும் நாடக ஆசிரியர் மட்டுமல்ல; உயிரூட்டமுள்ள கருத்துக்களைப் பாடல்களாக வடித்துக் கொடுக்கும் சிறந்த கவிஞரும் கூட, நுணுக்கமாக ஆராய்ந்தால் அவருடைய பாடல்களில் இனிமையும் அழகும் பொலிவது புலனாகும். "காலம் எனும் சிற்பி செய்யும் கவிதைத் தாய் கோயிலடா...", "இமயமலைச் சாரலிலே இசைபாடும் கங்கையென ......", போன்ற பாடல்கள் எல்லாம் மெய்யுணர்வு கலந்தவை. மெய்யறிதல் நிலையில் 'வோர்ட்ஸ் வொர்த்தும் அழகுணர்ச்சியில் 'ஷெல்லியும் திரு. சுந்தரத்தின் கவிதைகளில் காணப்படுகின்றனர்.

திரு. சுந்தரம் அவர்கள் தமிழறிந்த பெரும் புலவர், நாடறிந்த நாடக ஆசிரியர். இனிய பாடல்களை எழுதிப் புகழ் பெற்றவர். அன்னிய ஆட்சியின் முதுகெலும் பொடித்த வீரப் பெருமக்களின் வரிசையில் இவருக்கும் சிறப்பான இடம் உண்டு. ஆனால் இவரைத் தமிழகம் நன்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை. பாராட்டவுமில்லை. 'கவியின் கனவு' நாடகத்தில் கவிஞர் தம் மாணவர்களுக்குக் கூறுவதாக அமைந்துள்ள கருத்து—"அந்நாடகத்தை இன்றுதான் முடிக்கப்போகிறேன். அது ஒன்றே போதும் நமது நாட்டுமக்களின் ஊக்கத்தை மாற்ற" என்பது—முற்றிலும் உண்மை. அதற்கான அறிகுறிகள் தமிழகத்தில் தென்படுவது நமக்கெல்லாம் நம்பிக்கை யூட்டுகின்றது.

வாழ்க சுந்தரம்!

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press, 30, Edapalayam Street, Madras-3.

The following Machines & their Spare Parts available from ready Stock.



RICE HULLER

FLOUR MILL

DISINTGRATOR

DECORTICATOR

PAPER CUTTING MACHINE

ROTTARY & CENTRIFUGAL PUMPS

SUGARCANE CRUSHER

POWER DRIVEN

PINTO TYPE &

ROTTARY OIL MILLS ETC.



Telephone No. 3472. P. B. No. 174. Telegrams: NAVASTAR.

THE MADRAS MILL STORES

302, LINGHI CHETTY ST.,

MADRAS-1.

IRON AND STEEL

M. S. Joists, Channels, Angles, Rounds and G. P. Sheets

available against Quota Certificates

QUOTA HOLDERS PLEASE CONTACT

M. KUPPUSWAMY NAICKER

No 1, Braind Sqare,

MYSORE ROAD,

BANGALORE CITY.

Telephone : 3846 Telegrams : 'HAMSA' BANGALORE

★

கரி இரும்பு (PIG IRON) மாங்கனீஸ்—கீழ்த்தர

கிரேடுகள் III & IV

கோட்டா சர்டிபிகேட்டுகளின் பேரில் கிடைக்கும்.

கோட்டா வைத்திருப்பவர்கள் தயவு செய்து எழுதவும்.

எம். குப்புஸ்வாமி நாயக்கர்,

15, செம்புதாஸ் தெரு,

சென்னை - 1.

டெலிபோன் : 2489. தந்தி : 'HAMSA' MADRAS

ANANDA PARVATHI PRESS, MADRAS-3.